Regd: No M. 5277. UDUMALAI BEERANGI. டெலிபோன் 2597

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை (29-1-1949) விலை 1 அணா [குண்டு 17

காதலின் அழியாச் சின்னம்

(உடுமலை எஸ். ரஸாக்)

மொகலாய சாம்ராஜ்ஜியத்தின் தலைநகரான டில்லிமாநகர், தனது உயர்ந்த மதிற் கைகளைப் பரப்பி, அழகிய அரண்மனைகளையும் அநேக மணிமாடங்களையும், வானளாவும் தருக்களையும் வாரியணைத்துக் கொண்டிருப்பதுபோல் தோற்றமளித்தது. அம்மதிற் கைகளுக்கு முத்தமிட்டோடும் மங்கையைப் போல் சலசல வென்ற சதங்கையொலியுடன் ஓடிக்கொண்டிருந்தது யமுனை நதி. நகரின் நாற்புறம் பச்சைப் பசேலென்ற இளம்பயிர்கள் பரிகசித்து நிற்பதுபோல் காணப்பட்டன. விசும்பினின்றும் வெளிக்கிளம்பும் வெண்மதியின் தண்ணென்கதிர்கள் தரணியெங்கும் தவழ்ந்து பரவலுற்றன. அந்த மாசற்ற நிலவில், அரண்மனைப் பூங்காவிலே நின்று யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் மும்தாஜ். ஆம்' காதலனின் வருகைக்காக காத்திருக்கிறாள் அக்காரிகை. அவள் முகமலர் ஏன் அப்படி வாடியிருக்கிறது? குறிப்பிட்ட நேரத்தில் காதலன் வரவில்லையே என்ற ஏக்கம் போலும்?

அதோ அவனும் வந்துவிட்டான். அவனைக் கண்டதும் அவளது வதனம், இரவியைக் கண்ட அரவிந்தமென மலர்கிறது. ஓடி அவனது கரங்களை ஆவலோடு பற்றுகிறாள். ஆனால், அவளைக் கண்டதும் அவனது முகமண்டலத்திலே சோகப்படலம் படருகிறது. சிறிது நேரம்வரை அவளது முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு நீண்டதோர் பெருமூச்செறிகிறான். அவளிடம் ஏதோ சொல்லவேண்டுமென்று நினைக்கிறான். ஆனால், அவனது நினைவை மறைத்து விடுகிறது சோகத்திரை. காதலனின் கலக்கத்தைக் கண்டு அவளும் கலக்கமடைகிறாள். அவனது மௌனம், அவளது உள்ளத்தில் ஆயிரம் ஈட்டிகளைக் கொண்டு தாக்குவதுபோல் உறுத்திற்று. உணர்ச்சியின் வேகத்தால் அவள் உந்தப்பட்டு, என்றும் புன்முறுவலோடு கூடிய உங்கள் முகம் வாட்டமுற்றிருப்பதேன்? என்று காதலனைக் கேட்டாள்.

அன்பே! இதுதான் நமது கடைசி சந்திப்பென தோன்றுகிறது. அதனால்தான்......? என்று இடறிய குரலில் பதிலளித்தான் ஷாஜஹான்.

தூர் ஜாவ்......!!!

தூர் ஜாவ்: கலகத்தை அடக்கத்தான் ரிசேர்வ் போலீஸா? தக்ளியை சுற்றிக்கொண்டிருக்கும் போது வீண் தொந்திரவு...... கபர்தார்! தூரப்போ!!

(சேலத்தில் தோழர் பட்டாபி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை யொட்டியது)

ஏன்? அப்படியானல் இனி நீங்கள் டில்லியில் இருக்கப் போவதில்லையா? என்று கண்ணீர் மல்கிய கண்களுடன் தன் காதலனைப் பார்த்துக் கேட்டாள் மும்தாஜ்.

"இல்லை. நான் தக்காணத்தின் மீது படையெடுத்துச் சென்று, பாண்டிய மன்னனை மண்டியிடச் செய்யவேண்டுமென்று என் தந்தை எனக்கு உத்திரவிட்டிருக்கிறார்"

"பைந்தமிழ் மன்னனை பாண்டியன் மீதாபடையெடுக்கப் போகப் போகிறீர்கள்? அவன் ஒன்னலரை ஓட்டம் பிடிக்கச் செய்திடுவானே. நண்ணலரை நடுங்கச் செய்யும் வீரம், அடையலரை அபஜயமடையச் செய்யும் ஆற்றல், விரவலரை விரட்டியோட்டும் வெஞ்சமர்த்திறம் ஆகியவை அமையப் பெற்ற அம்மன்னனுடன் தாங்கள் போருக்குச் செல்லவே கூடாது?

"கண்ணே! கலங்காதே. பாண்டியன் பராக்கிரமசாலிதான். ஆனால் அவனுக்கு நேர்முகமாக நின்று நான் போர்ப் புரியப்போவதில்லை. முதலில், அவனது ஆயுத பலத்தையும், ஆள் பலத்தையும், அந்தரங்கங்களையும் அறிந்த பின்பே போர் துவக்கவேண்டும்."

"அவைகளை ஒற்றறிய நம் படைகளில் ஒழுங்கான ஒற்றர்கள் இருக்கின்றார்களா?"

"நம் படைகளில் இல்லை. ஆனால் பாண்டியனின் படைகளில் பல்லாயிரம் பேர்கள் உண்டு!

"என்ன! பாண்டியனின் ஒற்றர்கள் உங்களுக்கு உதவுவார்களா"

"ஆம். பணத்தாசையால் உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யும் ஒரு கூட்டம் அங்கு இருக்கிறது."

"அவர்கள் யார்?"

"மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஓர் வஞ்சகர் கூட்டம். கடவுள் பெயரைச் சொல்லியே மன்னனையும், மக்களையும் மடையர்களாக்கிவிட்டு, அது தன்னிஷ்டம் போல் தரகு வேலை செய்து தின்று கொழுத்துத் திரிகிறது."

"அப்படியானல், அவர்களிருந்

பது நம் போன்ற விரோதிகளுக்குச் சாதகமென்று சொல்லுங்கள் ?"

"ஆம். அதில் சந்தேகமென்ன? நினைத்தமாத்திரத்தில் கணக்கற்ற சாம்ராஜ்யங்களைச் சிதைக்கும் வல்லமை அவ்வாரியர்களிடத்தில் உண்டு."

"அப்படியானால் நீங்கள் அவசியம் போகத்தான் வேண்டுமா?"

"ஆமாம். அவசியம் போகத்தான் வேண்டும்."

"ஆனால், என்று திரும்பி வருவீர்கள் ?"

"ஆறு மாதத்தில் திரும்பிவருவேன். இன்று பௌர்ணமி. இந்த ஏழாவது உவாவன்று நான் உன்னை வந்து காண்பேன். அதுவரை......"

"பொறுத்திருக்க என் உள்ளத்தில் உறுதியில்லையே! வறண்ட என் வாழ்வு வளம்பெறும் நேரத்தில்தானா இந்தப் பாழும் போர் துவங்கவேண்டும் ?";

"ஐயோ வேண்டாம். அதையெல்லாம் இப்போது நினைக்காதே கண்ணே! நம் காதல் உண்மையாயிருப்பின் உயிருடன் மீண்டும் வந்து உன்னை மணப்பேன். இன்றேல், பாண்டியனின் வாளுக்கு இரையாகி உயிர் மாள்வேன். சீக்கிரம் எனக்கு விடைகொடு?"

"அரசே! அபலையாகிய நான் என்ன சொல்லப் போகிறேன். சென்று அமரில் வெற்றியோடு விரைவில் திரும்புங்கள். இந்த ஆத்மா, ஒவ்வொருகணமும் உங்கள் வருகையையே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்."

போர் முரசு ஓசை கேட்கிறது. ஷாஜஹான் ஒரு முறை தன் காதலியின் முழுபிம்பத்தையும் உற்றுப் பார்த்துவிட்டு வெகமாக அவ்விடத்தைவிட்டு மறைகிறான். மும்தாஜ், மஞ்சத்திலே முகத்தைப் புதைத்து காதலனின் பிரிவைச் சகியாது கண்கலங்குகிறாள். கருங்குவளை மலரைப் போன்ற அவளது கண்கள், ஆறாக நீர் பெருகி செங்குவளையாக மாறின.

மாதங்களிரண்டும் மறைந்தோடின. இப்பொழுது ஷாஜஹான் தக்காணத்தில் பாண்டியனுடன் கோரப் போர் புரிந்துகொண்டிருக்கிறான். பாண்டியனின் படை மிகக் குறைவுதானென்றாலும் ஷாஜஹானின் சாகரத்தைப்போன்ற பெரும்படையுடன் சலியாது போர் புரிந்துகொண்டுதானிருக்கிறான். கணக்கற்ற முகலாய வீரர்கள், பாண்டியனின் வாளுக்குப் பணயமாவதைக் கண்டான் ஷாஜஹான். உடனே, அவன் போரை நிறுத்தி, பாண்டியனுடன் ஓர் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். பிறகு, பாண்டியனின் படைபலத்தைக் கொண்டு மகாராஷ்டிரர்களையும், பாமினி, விஜயநகர மன்னர்களையும் வென்று, டெல்லி பாதுஷாவிற்குக் கப்பம் கட்டும்படி செய்துவிட்டுத் தன்னகரை நோக்கிப் புறப்பட்டான்.

காதலனைப் பிரிந்த அந்த நாளிலிருந்து பித்துப் பிடித்தவளைப் போல் காணப்பட்டாள் மும்தாஜ். அவளது முகத்திலே பிரகாசித்துக் கொண்டிருந்த அந்த இன்ப ஒளி இப்போது குன்றிப் போயிற்று. சதா அவளது உள்ளத்திலே ஓர் பெரும் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. போர்க்களத்திலிருந்து தன் காதலன் வெற்றியோடு திரும்பி வருவானா? அல்லது பாண்டியனின் வீரவாளுக்கு இரையாகி விடுவானா? என்ற ஓர் கேள்வி. அவளது உள்ளக் கடலிலே ஓர் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. ஒவ்வோர் சமயம், தன் காதலன், பாண்டியனால் சிறைபடுத்தப்பட்டதைப்போல் கனவு கண்டு கண் கலங்குவாள். அப்போது, எதிர்காலம் அவளுக்கு சூன்யமயமாகத் தோன்றும். இந்த விதமாக, ஏழு மாதங்களையும் ஏழு யுகங்களாகக் கழித்தாள் மும்தாஜ். அந்த ஏழுமாத உள்ளக் கொதிப்பையும், உள்ளக் களிப்பாக மாற்றக்கூடிய அந்தத் திருநாள் சமீபத்தில் நெருங்கிவிட்டது.

அன்று டெல்லி நகரிலே ஒரே குதூகலம். அலங்கார தேவதையின் அணைப்பிலே துவழும் இந்நகரின் முக்கிய தெருக்களை எல்லாம் ஜனசமுத்திரமும், சேனா வெள்ளமும் வியாபித்து நின்றன. ஓய்வின்றி எழும் மங்கள ஒலியானது விண்ணைக் கிழித்தது. சந்தனம், புனுகு, ஜவ்வாது, அத்தர் போன்றவைகளின் நறுமணம், நானிலமெங்கும் பரவி கமழ்ந்தது. அரண்மனை அலங்கரிக்கப்பட்ட, அன்றலர்ந்த மலர்களிலுள்ள வண்டினங்கள் இசை பாடிப் பறந்து கொண்டிருந்தன. கணத்திற்குக் கணம் வெற்றி முரசு ஒலித்துக் கொண்டிருந்தது. குடிமக்கள் ஆவலோடு எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆம். மணமக்களாகிய இளவரசர் ஷாஜஹானையும், இளமயிலாகிய மும்தாஜையும்தான் அவர்கள் காணுவதன் பொருட்டுக் காத்திருந்தார்கள். கண்குளிர, காதலரிருவரையும் கண்டும் களித்தார்கள்.

இப்பொழுது ஷாஜஹான் யாதொரு தடங்கலுமின்றித் தன் காதலி பூர்ண வெற்றியடைந்தான். அவ்விருவரும் இன்பப் பூங்காவிலே இணைபிரியாது உலவி வந்ததின் பயனாக தாரா, ஷூஜா ஔரங்கசீப், மூராத், என்ற ஆண் மக்கள் என்ற ஆண்மக்கள் என்ற நால்வரும் ஜஹானாரா என்ற செல்வி ஒருவளுக்கும் பெற்றோர்களானார்கள். அவர்களது வாழ்க்கைச் சகடம் சின்னாள் வரை மகிழ்ச்சிப் பாதையில் உருண்டோடிக் கொண்டிருந்தது.

காலமென்னும் காலனின் கண்ணிமைப்பிலே கணக்கற்ற வருடங்கள் ஓடி மறைந்தன. ஔரங்கசீப், தன தகப்பனுக்கு எதிரியாகக் கிளர்ச்சி செய்வதையும், மற்ற மூன்று சகோதரர்களையும் நயவஞ்சகமாகக் கொன்றதையும் கண்ட மும்தாஜின் உள்ளம் புண்பட்டது. அவள் தன் மக்களுக்கென கட்டிய இன்பக்கோட்டை, ஔரங்கசீப்பால் தவிடுபொடியாக்கப் படுவதைக் கண்டு உருக்குலைந்தாள். இதே விசனத்தால் அவள் படுத்த படுக்கையானாள்.

அன்று அமாவாசை. காரிருள் காசினியெங்கும் கவிழ்ந்திருந்தது. மின்மினிப் பூச்சிகளின் சஞ்சாரம், அந்தக் காரிருளிலே தீப் பொறிகளெனத் தோற்றமளித்தது. தென்றல் காற்று புயற்காற்றாக மாறிப் பேரொலி எழுப்பியது. அரண்மனையிலுள்ள விளக்குகளெல்லாம் அப்பெருங் காற்றால் அணைந்து அந்தகாரம் சூழ்ந்தது. ஆனால், ஒரே ஒரு விளக்குமட்டும்- ஆம் அவள்தான் மும்தாஜ், காற்றுடனல்ல, காலனுடன் போராடிக் கொண்டிருந்தாள். அவளருகிலே உலகாதிபன் என்ற புகழ்பெற்ற ஷாஜஹான் சிந்தை கலக்கத்தோடும், கண்ணீர் மல்கிய கண்களோடும் நின்று கொண்டிருந்தான். அவள் இறந்து கொண்டிருந்தாள். கடைசியாகத் தன் காதலனிடம் ஒரு வரம் கேட்டாள். அதாவது, அவள் அரசனுடனிருந்து அன்பு வாழ்வு நடத்தியதையும், காதலின் உயர்வை உலகத்திற்கு உணர்த்தவும் வேண்டி, அவளது சமாதியின் மேல் அழகான கோரி ஒன்று கட்டவேண்டும் என்பதே.

மன்னனும் கட்டுவதாக ஒப்புக் கொண்டான். அவளது ஆவி சரீரக் கூண்டை விட்டுப் பிரிந்தது. அரண்மனையின் அணையாவிளக்கு அணைந்துவிட்டது. அகிலமெங்கும் அந்தகாரம் சூழ்ந்தது. அரசனின் உள்ளத்திலும் அவ்விருள் வியாபித்தது. அவனது எதிர்காலமே இருள்மயமாகத் தோற்றமளித்தது. காதலின் அழியாச் சின்னத்தைக். கட்ட ஆரம்பித்தான். பல்லாயிரம் சிற்பிகள் பல வருடங்களாக உழைத்து உருவாக்கி வந்தனர் அம் மண்டபத்தை. நாளுக்கு நாள் அது வளர்ந்துகொண்டேயிருந்தது. ஆனால், அதற்கெதிராக நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டேயிருந்தான் ஷாஜஹான்

அழியாச்சின்னமும் கட்டி முடிக்கப்பட்டது. அரசினின் ஆவியும் அன்றே தன் காதலியைத் தேடிச் சென்றது. மும்தாஜின் சமாதியருகிலேயே ஷாஜஹானுக்கும் சமாதி கட்டப்பட்டது. உலக வாழ்விலே ஒன்றாக வாழ்ந்து அழிந்த அக்காதலரின் சமாதிகளும் ஒரே இடத்தில் நிலைப்பெற்றன. அச்சமாதிகள் உள்ள இடம்தான் உலகப் பிரசித்திப்பெற்ற தாஜ்மகால். காதலின் அழியாச்சின்னம் அதுவே!

கோட்ஸே கும்பல்களுக்கு ஓர் எச்சரிக்கை

[அறிவழகன்]

கோட்ஸே கும்பல்களே! ஓர் எச்சரிக்கை. ஆம்! முன் அபாய அறிவிப்பேதான். ஆணவ வார்த்தைகளால் எங்களுக்கு ஆத்திரத்தை மூட்டுகிறீர்கள். நாங்களோ நிராயுதபாணிகள். வலிமையற்றல்ல; தலைவன் ஆணைக்கு அடங்கி கோட்ஸே கும்பல்களே! நீங்கள் பேசுகிறீர்கள் இம் மானமிழந்த தமிழ் நாட்டில் தான். பேசுங்கள்! நன்றாக பேசுங்கள் !!

ஆனால்? மானமிழந்த தமிழன் மறுமலர்ச்சியடைவதற்குள், இன உணர்வற்ற எங்கள் சகோதர சகோதரிகள் எழுச்சி கொள்வதற்குள் பாமர மக்கள் பகுத்தறிவாளர்களாவதற்குள் கலை, மொழி, நாகரீகம் இன்னதென்று அறிந்து கொள்வதற்குள், நடை உடை, பாவனைகளில் மாற்றம் காண்பதற்குள் கல்வி, செல்வம், தொழில் வளங்களில் முன்னேற்றமடைவதற்குள். ஆம்! எங்கள் தமிழன் விழித்தெழுவதற்குள் தான் பேசுங்கள்! நன்றாகப் பேசுங்கள்!!

எழுச்சியடையட்டும். புரட்சி ஓங்கட்டும் எத்தர்கள் பிறந்த இடத்தில் புல் முளைக்க பூண்டற்று போகட்டும். பழமை விரும்பிகள் பார்த்து திருந்தட்டும். புராணமேந்திகள் கையில் தீபந்தம் ஏந்தட்டும். கரம் கூப்பிய தோழன் வாளேந்தட்டும், நடைபிணங்கள் மனம் திடப்பட்டும்.

ஆளவைத்தோரே! அறிவைக் கொண்டு அலசிப் பாருங்கள், கோட்ஸே பேசுகிறார்! கேட்டு தீர்ப்பளியுங்கள். பகுத்தறிவற்றவர்களல்ல பகருவனவற்றைக் கேட்க, உறுதி கொள்ளுங்கள், உஞ்சிவிர்த்திகள் மடியும் மட்டும். எழுச்சி கொள்ளுங்கள் எத்தர்களை ஒழித்துக் கட்ட. முரசு கொட்டுங்கள், மூடர்கள் இல்லையென்று. கோட்ஸே கும்பல்கள் பேசினார்கள்! ஆம்! நன்றாகப் பேசினார்கள், அனல் நீங்கள் சிந்தித்து பார்த்தீர்களா? ஆம்! சிந்திக்க வேண்டாம்.

ஆணவமே பெரிதெனக் கொண்டு ஆட்சி பீடமேறி, அகங்காரத்தால் லீலைகள் பல செய்து சுயவிளம்பரம் செய்து கொள்ளும் அலங்கார பொம்மைகள் சிந்திக்கவேண்டாம்.

"வேதன் விதியிது," 'நாதன் கட்டளையது" எனக்கூறி சொகுசு சுந்தரிகளுடன் வாழும் கொட்டை உருட்டிகளும், உருத்திராக்ஷ பூனைகளும் சிந்திக்க வேண்டாம்.

"தந்திக் கம்பியை தகர்த்தேன்." தபாலாபீஸை கொளுத்தினேன்," எனக்கூறி அலுவலகத்துக்கு மனுக்கள் செய்து மறு உத்திரவை எதிர்நோக்கும் எத்தர்கள் சிந்திக்க வேண்டாம்.

கோயில் பெருச்சாளிகள் கொண்டமட்டும் கொள்ளையடிப்பதை கண்டும், சுந்தரர் ஆலயத்திலே சுண்டலுக்காக காத்து நிற்கும் சுப்பண்ணாக்கள் சிந்திக்க வேண்டாம்.

'பாட்டன் சென்ற பாதையது, முன்னோர் கையாண்ட முறையிது" எனக்கூறும் பழமை விரும்பிகளும், புராண மேந்திகளும், ஆரிய தாஸர்களும், ஆண்டவன் அடியார்களும் சிந்திக்க வேண்டாம்.

ஆனால் 'மானிடனாகப் பிறந்தேன்? பிறந்தென்ன பயன்? உயர் குலத்திலுதித்திருக்க வேண்டும். இன்றேல் அறிவற்றவனாக இருந்திருக்க வேண்டும்" என ஏங்கித் திரியும் எம் வழி வந்தாரே! நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

' பல்லவிகள் பலபாடி ஓட்டுகள் பல பெற்று பதவி பெற்றோமே! பாராள வைத்தோரே! பாருங்கள் வடநாட்டுக்கு அனுமான் காவடி எடுப்பதை" என வெட்கி தலை குனியும் வண்டமிழ் வளநாட்டோரே; நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

"பாடுபட்டோம் பாதி வயிறு கஞ்சிக்கு வழியில்லை அதோ! கிழிந்த பஞ்சாங்கமும்' உலர்ந்த புல்லையும் கையிலேந்தி திரிகிறானே சோம்பேறி, அவன் வாழ்வில் வளம் காண்கிறேனே என பாட்டுகள் பாடி திரியும் பாட்டாளிகளே! நீங்கள் சிந்திக்க வேண்டாமா?

ஆம்? சிந்திக்க வேண்டாம். ஆரிய சூழ்ச்சியிலே அகப்பட்டுக் கிடக்கும் அன்பர்களே! சிந்திக்க வேண்டாம். கம்ப கதையிலே மயங்கிக் கிடக்கும் கம்ப தாஸர்களே சிந்திக்க வேண்டாம்.

திருடர்களின் குகை என்றார் ஏசுபிரான். தாசிகளின் மடம் என்றார். திரு காந்தியார். முப்பாலும் பாழ் என்றார் சடகோபர். அப்பாலும் பாழ் என்றார் திருமூலர். அறிவீரா? எமதாருயிர் அன்பர்களே! இனியாவது சிந்திப்பீர்களா?

'அறியாமையாமலத்தாலறிவு முதற்கொட்டனடா பிரியாவினைப் பயனாற் பித்துப் பிடித்தனடா'' என பட்டினத்தடிகள் அருட்புலம்பலில் அன்பர்களுக்கெலாம் அள்ளி வீசியிருப்பதைஉணர்ந்தாவது திருந்திநல் வழியடைய சிந்திப்பீர்களா? உங்களை குறைகூறி என்னபயன்? அடிமை எண்ணத்துக்குஅடிமைப்பட்டீர், ஆரியர்களின் வழி சென்றீர், பழங்கால முதிர்ந்த மரத்தை அசைப்பது சற்று கடினம்தான். இருப்பினும் பெரியார் பெரும்படைக்கு அதுவென்ன பெரும்பணியா?

போர்வாள் நாடகத்துக்கு தடையென விளம்பரம் செய்தபோது எங்கள் வெண்தாடி வேந்தன் ஈ.வெ,ரா பொறுமையை இழக்க வேண்டாம் என விடுதலையிலே விளக்கம் தந்திருக்கா விட்டால், விப்பிர கூட்டங்களே! நீவீர் அன்றே அழிந்துபோயிருப்பீர்கள்.

இராவண காவியத்திக்கு தடையென கண்டோம். இறுமார்புகொண்டோட், இனி ஈணர்களை விடுவதில்லையென்று அறிக்கை வராதிருந்தால். ஏ புல்லேந்திகளே! நீவீர் அழிந்திருப்பீர் அக்காலத்திலேயே.

கருப்புச்சட்டைப் படைக்கு தடையெனக் கண்டோம். ஓடினோம் ஈரோட்டு பாசறைக்கு. எடுத்துகாட்டினோம் அமைச்சர் குழுவினரின் அடாத செய்கையை 'பலாத்காரம் கூடாது என திராவிடத்தந்தைபதில் தந்திராவிட்டால், கோட்ஸே கும்பல்களே! அன்றே அழிந்துபோயிருப்பீர்கள் பூண்டோடு பூண்டாக.

இரணியன் நாடகத்துக்கு தடையைன இறுமார்பு கொண்டீர். இனி பொறுக்கமாட்டோம், பொறுத்தது போதுமென கேட்டோம். கொலைவாளினை எடடா, மிகமொடியோர் செயல் அறவேஎன புரட்சிகவிஞரின் பாடலைக் காட்டி. ஈரோட்டுவள்ளல் ஈந்த பதில் பொறுமை பொறுமையென்றுஇன்றேல் ஆரியபதர்களே! நீவீர் அன்றே வாழுவழியற்று போயிருப்பீர்கள்.

இந்தி நுழைந்தது கன்னித் தமிழைக்கெடுக்க இனியும்பொறுமையா? என புலம்பினோம். அன்பின் சிகரம் ஈரோட்டுபாதையின் பதில் அறப்போர் என்று. அறப்போரா? என்றோம், ஆம்! என்றார் கிழட்டு ப்பெரியார். தாளமுத்து! நடராஜன்!! என்றோம். தரவேன்டிய பரிசு என்றார் தன்மானத் தந்தை.

குடந்தையிலே கொட்டினோம் குருதியை. கோவில் பட்டியிலே நின்றோம். திருவண்ணாமலையிலே திருவாரூரிலே இன்னும்பல தொல்லைகள் கண்டோம். முடிவிலேஓடினோம் பெரியார் ராமசாமி கர்ஜித்து கொண்டிருந்தார் மேடையிலே புலம்பினோம் பொறுக்க இயலாதென்று, செய் அல்லது மாண்டுபோ என எங்கள் குருதியிலே வீரத்தை செலுத்திவிட்டு அகிம்ஸையைக் கடைபிடிக்க சொல்வது நீதியோ? என வேண்டிய மட்டும் கேட்டோம்.

தன்மேல் போர்வையை ஒருகையால் இழுத்துபோர்த்திக்கொண்டு மற்றோர் கையால் குறுகி வளைந்து நீண்டதடியை மேடையதிர தட்டினார் மேலே பேசவொட்டாமல் ஏ குல்லுக பட்டர் வழி வந்தோரே! நீவிர் அன்றே அழிந்துபோயிருப்பீர்கள்; எங்கள் பெரியார் குறுத்தடியை மறந்து இல்லத்திலேயே வைத்து விட்டு வந்திருப்பீரானால்.

கோட்ஸே கும்பல்களே! பேசுங்கள் நன்றாகப்பேசுங்கள்!! அறிவு தெளிவுபெற இன்னும்நன்றாகப்பேசுங்கள்!! குருதியிலே வீரம் சொரிய நன்குபேசுங்கள்!! ஈரோட்டு கிழவன் மறைவதற்குள் நன்றாக பேசுங்கள்!! பெரியாரின் உடல் புதைக்கப்படுவதற்குள் நன்றாகப் பேசிவிடுங்கள்!! அண்ணலின் ஆவி அவர் உடல்விட்டு செல்வதற்குள் பேசியே தீருங்குள்!! ஆம்! தீர்த்துவிடுங்கள். இதுவே எங்களால், உங்களுக்கு அளிக்கப்படும் அபாயஅறிவிப்பு. கோட்ஸே கும்பல்களுக்கு ஓர் எச்சரிக்கையும் கூட,

நடந்த கதை

நான் விபச்சாரி, அது என் குற்றமா?

—ப. ஆ. சீதாமணாளன்—

நள்ளிரவு, ஊர்முழுதும் உறக்கத்திலிருந்திருக்கும். மாதாகோவில் மணி டங், டங்' என்ற ஒலி எனது ஆழ்ந்த உறக்கத்தைக் கலைத்தது. காதலர் காத்திருப்பாரே என்ற நினைவு என்உள்ளத்தில் உதித்தது. கடிகாரத்தை நோக்கினேன். மணி, பன்னிரெண்டுதான். ஏகனுக்கும் எனக்கும் பிறந்த, எனது அருமை கண்மணியை நோக்கினேன். என் கண்களில் கண்ணீர் ததும்பிற்று. கனிப்போன்ற கன்னங்களைக் கண்டு எனது கண்களிலிருந்த கண்ணீர் உருள ஆரம்பித்தது. சிறிது நேரம் சிந்தித்தேன். சீ, விபச்சாரியின் மகள் என்று வினவும் இந்த பாழும் சமூகத்தில் விட்டுச்செல்வதா, அல்லது கொல்வதா? என்ற எண்ணம் என்னை திகைக்கச்செய்தது. கொன்றாலும் கொலைக்காரி என்ற பழி சுமத்துமே இந்த சமூகம், எதைத்தான் சொல்ல தயங்கும் இந்தசமூகம்? மணி ஒன்று அடித்தது. ஒண்டியாய் காத்திருப்பாரே காதலர் அங்கு. என்வரவைநோக்கி.

கண்மணியின் உறக்கத்தைகலைப்பதா? என்றெண்ணி கனிப்போன்ற கன்னத்தில் கடைசி முத்தம் தந்துவிட்டு, தாளைத் திறந்து நாலடி எடுத்து வைத்து நடக்கலானேன். நாய்கள் குரைக்க ஆரம்பித்தது. அதனிடத்திலும் சமாதான முறையில் நடந்து சென்று உல்லாசமாக மாதா கோயிலைக் கடந்தேன். மாது தங்கம் வரவை நோக்கி மன்னன், சுந்தரம் நிற்கக் கண்டேன். என்னைக் கண்டதும் அவர் முகம் மறு மலர்ச்சியடைந்தது. என் புன்னகை பூங்காவாகயிருந்தது. சிறிது நேரம் அங்கு, இன்ப உரையாடல். உல்லாசமாக உரையாடிக் கொண்டே விடியும் முன் அவர் வீடு போய்ச் சேர்ந்தோம். வாழ்க்கையில் இன்பம். அது மட்டுமா? இணைப்பிரியா ஆனந்தம்.

அடிப்பாவி, ஆனந்தம் என்கிறாயே. வெட்கம், மானம் இல்லாமல், கொண்டவனை விட்டு கண்டவன் பின்னால் திரிந்துக் கொண்டு, என்று சொல்வீர்கள், ஆம் என் கதையைக்கேட்டிருந்தால், சொல்லமாட்டீர்கள்.

ஆம் நான் ஓர் விபச்சாரி. ஏன்? அதைக் கேட்டுத் தூற்றுங்கள் விபச்சாரி என்று வீரமாக. ஆனால் தூற்ற மாட்டீர்கள் என்பது தான் எனது ஐயம்.

அன்று ஐந்தண்ணன் தம்பியுடன் அன்னம் போல் உலாவிக் கொண்டிருந்தேன். இன்று அவர்களே விபச்சாரி என்றும், அபசாரி என்றும் காற்றில் தூற்றி விடுகிறார்கள். தாய், தந்தையர்க்கு தங்கம் போல் திகழ்ந்தேன். இன்று அவர்களே தாசி, வேசி, என்று உளருகிறார்கள். உளரட்டும். இனி திருந்துவார்கள். செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்தேன். அதற்காக தங்கம் என்றே பெயர் சூட்டினார்கள்.

"அடி துரோகி அந்த குடும்பத்திற்கே அவமானமாக நடந்து கொண்டாயே, சண்டாளி'' என்று சாற்றுவீர்கள்.

ஆம் முழுதும் கேட்டுச் சாற்றுங்கள்.

மாதங்கள் மறைந்தன. மங்கை பருவம் ஏற்றேன். அன்று தான் அம்மான் என்ற முறையில் என்னை, அணைக்க முன் வந்தான் ஏகன். மணக்கவும் முயன்றான். இசைந்தேனா? இல்லை. தாய், தந்தையர்கள் இசைந்தார்கள் தாசி என்று கூற. அண்ணன் தம்பி அதை ஆதரித்தனர் அபச்சாரி என்று கூற. பெண்களுக்குத்தான் எதிர்த்து பேசும் உரிமையை பறிக்கப் பட்டுள்ளதே இந்த நாட்டில்.

நாள் குறிப்பிட்டு திருமணமும் நடந்தது ஒருவாறாக. மண பந்தலில் மக்கள் வாழ்த்தினர். பார்ப்பான் முதல் கொண்டு, அரசாணிகால் வரை அம்மி கல்லும் சாட்சியாக வந்திருந்தன. அதெல்லாம் இன்று எங்கு மறைந்ததோ தெரியவில்லை. இன்ப வாழ்க்கை எப்படி நடத்த முடியும் இஷ்டமில்லா கணவனிடத்தில். கடமைக்காக காலம் கடத்தி வந்தேன். ஓர் ஆண்டு ஓடியது. கற்பிணியானேன். கண்மணியும் கையில் திகழ்ந்தது. கணவனைத் தேட ஆட்கள் வேண்டியதாயிற்று. பாதையில் ஓர் பாவை பாசத்தைக் காட்டினாள். அதற்கவன் இசைந்து அவள் பின் தொடர்ந்தான். அன்றாடம் வாழ்க்கைக்கே அரிதாகி விட்டது. புருஷனில்லா வாழ்க்கை பூங்காவாக யிருக்குமா? தாய் வீடு திரும்பினேன். தங்கத்தை தழுவி கொண்டார்கள். தலைவிதி என்ற பழியை சுமத்தினார்கள்,

கண் மணிக்கு வயது இரண்டு உருண்டோடியது. எனக்கோ கவலை அதிகரித்தது. தாய் வீட்டில் கணவனை தவிர மற்ற எல்லா சுகமும் உண்டு. இருந்தாலும் காம சுகத்தைத் தர கணவன் இல்லையானால் அது எப்படி எனக்கு திருப்தியாயிருக்கும்? அதைப் பற்றி கவலை அவர்களுக் கேது? அந்த கவலை என்னைத் தானே உருக்கிக் கொண்டு வந்தது.

மாலை நேரம், மதி போன்ற முகத்தான். முகத்துக்குத் தகுந்த மீசையுங்கூட, அவன் கண் வீச்சுக்கு அகப்பட்டவளானேன், அவன் கண்களின் பார்வை கூறிய அம்பு போல் என் மீது பாய்ந்தது. காமப் பசியால் கலங்கி கொண்டிருக்கும் நான். அந்த பார்வையை எப்படிவரவேற்காமலிருப்பேன். அப்படி யிருந்தும் பார்த்தேன் பலநாள், சமூகத்திற்கு கட்டுப்பட்டு, விபச்சாரி என்றும் அபச்சாரி என்றும் எனும் பல்லா நாக்கினால் கூக்குரலிடுமே என்று. அதன்பின் கட்டுப்படுத்த கடினமாயிருந்தது.

அன்று என் மீது பார்வையைச் செலுத்திய சுந்தரத்தை சந்திக்க சந்தற்பம் கிடைத்தது: அதன்பின் பலமுறை சந்திப்பு. கடைசியாக உறுதிமொழியுங் கூறினார் சுந்தரம்.

வெண்மதியின் ஒளியில் உல்லாசமாக பறந்து விட்டேன் இன்று சுந்தரத்துடன் வாழ்க்கையில் ஆனந்தம் தான். ஆம். இப்பொழுது நீங்கள் தீர்ப்பு கூறுங்கள் யார் குற்றம் என்று?

என் கண்ணுக்குப் பிடித்தமில்லாத கணவனிடம் கடமைக்கு தள்ளியது தாய், தந்தையரின் குற்றமா?

அதை ஆதரித்த அண்ணன் தம்பியின் குற்றமா?

கொண்டவளுக்கு கண்மணியையும் கையில் தந்து கன்னியுடன் சென்ற கணவனின் குற்றமா?

சமூகத்தையும் வெறுத்து கண்மணியையும் மறந்து, என் காமப் பசியும் தீர்ந்து, என் நல்வாழ்க்கைக்கும் நலனைத்தேடி என் கற்புக்கிசைந்த மறுக்கணவனைத்தேடியது என் குற்றமா? இப்பொழுது தூற்றுங்கள் விபச்சாரி என்று பரவாயில்லை.

ஆம் மறு கணவனைத் தேடியதற்கு விபச்சாரி என்ற பட்டம் சூட்டினீர்கள். மறு மங்கையை ஏற்றுக்கொண்டானே, அவனுக்கும் சூட்டுங்கள் ஓர் பட்டம் விபச்சாரிஎன்ற 'பட்டம் ஒருபுறமிருக்கட்டும்- என் வாழ்க்கையில் ஆனந்தம்; அதுவே போதும்.

ஐயோ! சனாதனமே!

அய்யங்காரின் காம வேட்டை

துயிலுரி படலம்!

கற்பழிக்க முயன்ற கதை

அபராதம் ரூ 200

—:(o):—

சீர்காழி டீ. டீ. பிள்ளை எனபிரபல 300 வேலி மிராசுதாரரின், ஏஜண்டான தென்பாதி குப்புசாமி அய்யங்கார் ஷை பண்ணையாள் கைவிளாஞ்சேரி பிச்சமுத்துவின் மனைவி சுமார் 18 வயதுள்ள யுவதி புல்லுக் கட்டு கொண்டு போடப்போனவளை கொட்டிலில் மறித்துக்கொண்டு, பலாத்கார புணர்ச்சிக்கு பிடித்து இழுக்க ஷை சிறுமி கூச்சல் போட்டு திமிறிவிட்டு வெளி யேறிவிட்டாள். இது 26-12-48ல் நடந்தது. அய்யங்கார் தலைமறைவாகிவிட்டார். 28-12-48ல் ரூ 200ஐயும் மேற்படியூர் ஆதிதிராவிட நாட்டாண்மை நாகப்பனுக்கு கொடுத்து அமுக்கி விட்டார். குறிப்பு:—குப்புசாமி அய்யங்கார் என்பவர் கம்பராமாயண எதிர்ப்பு பிரசாரத்தைக் கண்டித்து தூற்றிய கபோதியாம், காழி உயர் நிலைபள்ளியின் ஆசிரியர் கே. ரங்காச்சாரியின் கோலாகலச் சொந்த தந்தையேயாம் என்பது குறிப்பிடத்தக்கது. ரெ. சண்முகன்.

விற்பனையாளர்களுக்கு வேண்டுகோள்

வழக்கம் போல் பட்டியல் அனுப்பப்பட மாட்டாது. பிப். 5-ம் தேதிக்குள் அவரவர் அனுப்ப வேண்டிய தொகையை பாக்கியில்லாமல் அனுப்பித்து வைத்து பேராதரவு தருமாறு வேண்டுகிறோம். 5-ம் தேதிக்குள் பணம் வந்து சேராவிடின் பத்திரிகை நிறுத்திவிடப்படும். ஆயினும் அவ்வித அவசியத்தை இது வரையும் ஒரே ஒரு விற்பனையாளரைத் தவிர மற்றெவரும் ஏற்படுத்தவில்லை யென்பதை நினைக்க மகிழ்ச்சியும் கொள்ளாதிருக்க முடியுமா? அம்மகிழ்ச்சிக்குரியவர்கள் தொகைகளை அனுப்பித்து வரும் விற்பனைத் தோழர்களேயாவர். வணக்கம் பலப்பல. நிர்வாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	29-1-49

தேவதாஸ் காந்தி

சிலநாள் முன்னதாக தோழர் காந்தியாரின்மக்களில் ஒருவரான தேவதாஸ் காந்தி என்றொருவர், ஒரு சில பத்திரிகை ஆசிரியர்கள் கொண்ட கூட்டத்துக்குத் தலைமை தாங்கி அறிவுடனோ அல்லது மற்றெவ்விதமோ ஆற்றிய சொற்பொழிவை நேயர்கள் தெரிந்திருப்பார்கள் என நினைக்கிறோம்,

இதே தேவதாஸ் காந்தி புவியை விட்டகன்ற காந்தியார் அவர்களின் புதல்வர் என்ற ஒரே காரணமேயன்றி வேறொரு விசேஷத்தாலும் எழுதத் துணியவில்லை. அவரும் எவ்வித விசேஷத்துக்கோ விளம்பரத்துக்கோ சற்றேனும் தகுதியுள்ளவர் அல்ல என்பதுவே எம் தாழ்மையான கருத்து. "தவளை தன்வாயால் கெட்டது" என்றபடி "புதல்வர்" என்ற மரியாதைக்கும் உரியவரல்லர் என்பதைத்தான் தன் சொற்பொழிவாலும் அம்பலமாக்கிக் கொண்டிருக்கிறார் என்பது ஒருபுறமிருக்க தன் அறியாமையையும் அரசியல் ஞான சூனியத்தையுமேவெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார் என்பதை நடுநிலை வகிக்கும் எவரும் ஒத்துக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

தன் தகப்பனாரின் ஞாபகார்த்த நிதி தோல்வியடைய வில்லை என்று பேசுகிறார். இதற்காக பரிதாபப் பட வேண்டியதே தவிர வேறொன்றுமில்லை.

இவ்வகண்ட இந்தியாவில் இது வரையும் மலைபோல் செய்துவரும் பிரயத்தினங்களின் பேரிலும் ஆட்சியாளர் ஈடுபட்டும் வசூலாயிருக்கும் தொகை இரண்டே கால் கோடியே. இத்தொகையும் பெரும்பாலும் கவர்னமெண்டு உத்தியோகஸ்தர் களிடத்திலிருந்தும் பல கள்ள மார்க்கட்டுகளிலிருந்து கொள்ளையடித்து பணப்பெருக்கத்தை யடைந்திருக்கும் மில் மொதலாளிகளிடத்திலிருந்துமே என்ற உண்மை பல பத்திரிகைகளிலும் காணக் கிடைக்கின்றன, உண்மை இவ்விதமிருக்க அவர் திருந்திப் பேசியிருப்பதின் காரணந்தான் தெரியவில்லை- இதுவரை வசூலாயிருக்கும் தொகையும் கண்டிப்பினலல்ல, கட்டாயத்தினலல்ல, ஆனல் அன்பினலும் ஆதரவளிக்கும் தோரணையிலுமே கொடுக்கப்பட்ட தென்ருவது சொல்லமுடியுமா வென்றுதான் கேட்க வேண்டியேற்படுகிறது. இதுவும் நமக்கு முக்கியமாகத் தோன்றவில்லை. கோயில்களுக்குக் கொட்டிக்கொடுத்து; குருக்கள்களை கொழுக்க வைத்துக் கண்ட பலனென்ன? ஆயினும் கோயில்களுக்குக் கொடுக்கும் மேதாவிகளும் இல்லாமலா போய் விட்டார்கள்? அதுவே போல் இதுவரை தேசியத்தின் பேராலும் மற்றெவ்வெவ்வளவோ விதங்களாலும் வசூலித்த கோடிகளும் பலப்பல. அவைகளின் கதி என்னவாயிற்று என்பது இத்தென்னாட்டார் அறிந்து கொள்ள முடிகிறதா? அப்படியிருந்தும் காந்தி நிதிக்குக் கொடுக்க ஆளில்லையெனச் சொல்ல நாம் துணிந்தோமில்லை; அல்லது காந்தியார் நிதிக்குக் கொடுக்கப்படாதென்றோ அல்லது தேவதாஸைக் குறைவு படுத்திப் பேச வேண்டுமென்றோ நாம் முற்பட வில்லை. அதற்கு அவசியமும் எற்படவில்லை. ஆனல் உண்மையை எடுத்துக் காட்டவே எழுதலானோம். காந்தியின் ஞாபகார்த்த நிதி தோல்வியடைந்து விட்டது என்பதை ஒரு முறையல்ல இரு முறையல்ல பன் முறையும் சொல்ல விரும்புகிறோம்.

இதை மழுப்பிப் பேசுவதிலும் மக்களை மாக்களாக்கச் செய்ய எத்தனித்து வருவதும் நீதியாகாதென்றுதான் சொல்ல விரும்புகிறோம்.

இனி அடுத்தபடியாக, பத்திரிகைகளைப்பற்றிப் பேசியதைப் பார்க்கத்தான் நமக்குச் சிரிப்பு எற்படுகிறது. இவர் எப்பத்திரிகைகளைக் குறித்துப் பேசியிருக்கவேண்டும்? தமக்கு ஒத்துதும், துதிபாடும், ஜாலர் கொட்டும் தேசீய தாள்களைக் கண்டிக்க வேண்டிய அவசியமோ அவசரமோ எற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அப்பத்திரிகைகளைப்பற்றி நாம் ஒன்றும் பிரமாதப்படுத்தவும் தேவையில்லை. குதிரைப்பந்தயம் ஒழிக்கப்படவேண்டுமென்பர். ஆனல் அதே தாளில் மற்றொரு பத்தியில் பந்தய விஷயங்களையும் ஓடும் குதிரைகளின் விவரங்களையும் விளம்பரப்படுத்தி வருவர்.

ஆபாச விளம்பரங்களை அனுமதிக்கலாகா தென்பர். ஆனல் ஆணும் பெண்ணும் அம்மணமாயிருக்கும்படியாக பொம்மைகள் போட்டு வருவாயைப் பெருக்கி வருவர். இவர்களும் பத்திரிகையாளர்கள்தான். விளம்பரங்களைத் தடுப்பதற்கான சட்டம் வந்தாலொழிய இவர்கள் கட்டுப்படுவதாகத் தெரியவில்லை. இவர்கள்தான் தேசியத்தாள்களின் ஆசிரியர்கள். உலகுக்கு வழி காட்டிகள். உற்றதை எடுத்துக் காட்டுபவர்கள். ஊர் சுகமடைய பாடுபடுபவர்கள், "எவள் எவனுடன் போனலும் லப்யைக்கு ஐந்து பணம் என்றபடி மக்களின் கதியும் நிலையும் எனனலும் அவர்களுக்கு நாட்டமெல்லாம் பிறரை வாழ்த்தியோ அல்லது வாலைப்பிடித்தோ அல்லது கால்களை வருடியோ தங்கள் வயிற்றைக் கழுவிக் கொள்வதோடு கூட நில்லாமல் மக்களின் சுதந்திரத்தைப் பறிகொடுத்தேனும் சுய மரியாதையை இழந்தேனும் தம்முடைய செல்வத்தையும் செல்வாக்கையுமே பெருக்கிக் கொள்ள வேண்டுமென்று கங்கணம் கட்டித்திரியும் பணியிலேயே ஈடுபட்டிருக்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இவைகளிலிருந்தும் அப்பத்திரிகையாசிரியர்களின் கூட்டத்திலிருந்தும் நமது அன்பிற்குரிய தேவதாஸ் என்ன அறிந்து கொள்ளமுடியும்? அல்லது அப்பத்திரிகைகளைக் குறித்துப் பேச வேண்டிய அவசியந்தானென்ன? அவர் குறித்துப் பேசியதெல்லாம் எதிர்க்கக்ஷிப் பத்திரிகைகளைத்தானே? இல்லை என்று நெஞ்சில் கைவைத்துச் சொல்ல முடியுமா வென்று தான் கேட்கின்றோம். இதை வாசகர்களும் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

சில பத்திரிகைகள் விபரீத பிரசாரங்களில் இறங்கியிருப்பதாயும் அவைகளைத் தடுத்தாக வேண்டுமென்றும் பேசத்துணிந்தது எந் நோக்கத்தைக் கொண்டு என்றுதான் கேட்கின்றோம். ஜன நாயக ஆட்சி என்று சொல்லிப் பீத்திக்கொள்ளும் ஆட்சியில் எதிர்க்கக்ஷிகளும் எதிர்ப்புத் தாள்களும் இருக்கத்தான் வேண்டும் இருந்துதான் தீரும் என்னும் அரசியல் ஞானம் சற்றேனும் இருந்திருந்தால் "அடக்க வேண்டும்" என்ற அடாத சொல்லை உபயோகப்படுத்தியிருக்க முடியுமா என்பதை மக்களே சிந்தித்துப் பார்க்கட்டும்.

எங்குமே இல்லை....

"மான்"

கோமானின் கோலாகலக்கூத்து வீட்டிற்குள் நடக்கும் குமுறும் ஏழை குடிசையில் பனியாலும் பசியாலும் விரைத்துக் கிடப்பான்-ரஷியாவில் ஏழை முதலாளி தரத்தில் பொவில்ஷ்விக் புரட்சிக்கு முன்னே இது சர்வ சாதாரண விஷயம்.

'வரிச்சுமை தாளவிலை' 'தயை காட்டுக' என நாட்டுமக்கள் அரசனைக் காண அரண்மனை வாயிலில் கூடுவர்—அவர்களுக்குப் பதில் கிடைப்பதற்கு பதிலாக-சவிக்கடி பவுசாகக்கிடைக்கும் கொடுங்கோலன் ஆட்சியிலே மக்கள் நிலை அதுவாக இருப்பதிலே ஆச்சரியம் இல்லை.

ஆனல் சொந்த நாட்டில் சொந்த மொழிக்காக, சொந்த மக்களுடன் போராடி மாளவேண்டிய அவசியம் தமிழ்நாட்டில் தமிழர்களிடை தமிழிசை பாடவேண்டிய அவசியத்திற்காக தமிழிசை மாநாடுகள் நடத்தவேண்டிய அவசியமும் இங்கேதான் எற்பட்டிருக்கின்றன. அவதார புருடர்கள் நிறைந்த இங்கேதான் அவை அதிகம்-வேறெங்குமே இல்லை.

5-ம் பக்கம் தொடர்ச்சி,

தீரத்தில் உள்ள மத்திய ஆசியாவிலிருந்து ஆடுமாடுகளை ஓட்டி வந்த வெண்மையையும் சிவப்பையும் கொடுப்பதைப்போல் உங்கள் இடத்தை பிறருக்குக் காட்டிக் கொடுப்பதைப்போல் உமது சிவப்பு நிறம் அமைந்துள்ளது. ஆக நீர் அவதூறுகத் தீட்டிக்கொண்டேயிருப்பின் உங்கள் இருப்பிடமாகிய புல்தரை நிறைந்த மத்திய ஆசியாவிற்கு சென்று விடவேண்டியது தவிர வழியில்லை. உச்சிக் குடுமியும், தொந்திவயிறும் படைத்த ஆரியனே! இனி நீவிர் ஆடம்பரம் எம்மிடம் பலிக்காது! உங்கள் இனம் காங்கிரசின் பெயரால் கதரையணிந்து நாட்டையே காத்துவந்த காந்தி மகானையே உங்கள் இனத்தவன் தர்பை ஏந்தும் கையில் துப்பாக்கியை ஏந்தி சுட்டுக் கொன்ற கோட்ஸே கும்பல் தான் உமது இனம்!

நாடாளவந்த கூட்டத்தாரை நயவஞ்சகம் பேசி, தீய வழியில் அதிகாரத்தை மேற்கொண்டும், தமிழ் நாடுகளில் வட நாட்டு மொழிக்கு சலுகைகாட்டியும், தமிழ் நாட்டிற்கு தங்களது வட நாட்டின் பெயரை வைத்தும் ஆணவம் கொண்ட கும்பல்தானே உமது இனம்!

உங்கள் உள்ளமோ எனின் உழுபவரிடம் இருந்தும், உழைப்பவரிடமிருந்தும், நயவஞ்சகமாக யாம் நிறுவிய கோவில்களில் உங்களது இனம்தான் தட்டையும் மணியையும் உரிமைகொண்டாடி சுரண்டிப் பிழைத்து வருவதும், மேலோகத்திற்கு டிக்கட் கொடுப்பதும், கோயில்களுக்கென்று இருக்கும் சொத்துக்களில் பங்கு கொண்டும், கோயில்களுக்கு வரும் இளம் மங்கையர்களை கெடுப்பதும் ஆக, இத்தகைய, ஈனச்செயல்களை புரிந்து வரும் கும்பல்தானே உமது இனம்!

இவ்வாறு ஏமாற்றிவருவதும் சுரண்டிப் பிழைப்பதும் உமது தொழிலாகக்கொண்டு இருக்கிறீர்களே இதுதான் உங்களுக்கு ஆஸ்திகக் கடவுள் கொடுத்த அருளா?

இனியும் இவ்வாறே சுரண்டிப் பிழைக்கலாம் என்று மேலும் எண்ணினல் இங்கிருப்பவரெல்லாம் ஏமாறுபவர்கள் என்று நினைத்துக் கொண்டனையா? அத்தகைய நம்பிக்கையை இத்துடன் விட்டுவிடு ஆரியனே! இது, இனி பலிக்காது.

முப்புரித்தரித்த நீர் இனியும் அவதூராக எழுதாது நல் வழியில் தீட்டு வீரா?

நலம் வாழ்க!

இது உண்மையா?

மதுரையைச் சேர்ந்த ராமையா நாடார் என்பவர், ஆட்சியாளரிடமிருந்து சரியான நியாயமும், அவருக்குச் சேரவேண்டிய தொகையும் பெற சென்ற பதினைந்து நாட்களாக சென்னைக் கடற்கரையில் உண்ணு விரதமிருந்து வருவதை பத்திரிகைகள் இருட்டடைப்பு செய்து வருவதின் காரணமென்ன? அதே கடற்கரையில் ஹிந்து மத காப்பாளன் என்ற பெயரால் 5 நாட்களாக உண்ணுவிரதமிருந்து வரும் ஒரு பார்ப்பனனை மாத்திரம் பிரமாதமாக விளம்பரம் செய்து வருவதன் மருமமென்ன? என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்பது உண்மையா?

"குண்டாந்தடி"

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

முடிய இரவு மணி எழு ஆயிற்று, ஆதலால் வேலன் இரவு சாப்பாடு தேடும் பொருட்டு ஒரு தெருவழியே போனான். சில வீடுகளில் கிடைத்த சாப்பாட்டோடு தெருக்கோடியிலிருந்த ஒரு வீட்டுத் திண்ணையை அடைந்து அங்கே அமர்ந்தான். அமர்ந்தவேலன் அருந்தத் தொடங்கினான். சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது விக்கல் எடுத்தது. ஆகவே அவ் வீட்டுக்கார அம்மணியை கூப்பிட்டான். ஆளும் வரவில்லை—அரவமும் கேட்கவில்லை. ஆனால் உள்ளே வெளிச்சம்மட்டும் தெரிந்தது. பன்முறை தாயே! தாயே! என்று கூவினான். பலனில்லை. எழுந்து கதவைத் தட்டப்போனான். ஆனால் அது தாழ்ப்பாள் போடாது சற்று திறந்துதான் இருந்தது. ஆகவே இவன் கதவை முழுதும் திறந்து விட்டு தாயே! என்று கத்தினான்—பயனில்லை. ஒரு அடி உள்ளே எடுத்து வைத்தான். உடனே "தான் ஒரு திருடனின் மகன்" என்ற வாக்கியம் அவன் மனதிலே ஒலித்தது. ஆகவே உடனே கதவை பழையபடி சாற்றிவிட்டு திரும்பினான். அந்தோ; பரிதாபம்! அவ்வீட்டுக்குச் சொந்தக்காரரான ஐயர் எதிரே நின்றார். பாவம்! அவன் விக்கல் விலகியது அவன் அருந்திய அன்னம் அனைத்தும் அகன்று விட்டது. 'சீரணித்தது) இன்னமும் சொல்வானேன், அவனுடைய அந்தியகாலம் நெருங்கிவிட்டது-

திரு திருவென விழித்தான். அச்சமயத்திலே, "என்னடா? கருப்புச் சட்டைக்காரா! உன் கை வரிசையை என்னிடமே காட்டத்தொடங்கி விட்டாயே" என்ன? உண்மையைச் சொல்லி விடு" என்று மிரட்டினார் ஐயர். " ஐயோ! சாமி! நான் ஒன்றும் அரியேன். விக்கல் எடுத்தது, தண்ணீர் வேண்டுமென்று கூவினேன், உள்ளிருந்து யாரும் வரவில்லை. கதவைத் தட்ட நெருங்கினேன்" என்று சொல்லிக் கொண்டிக்கும் போதே ஐயர் அவனைத் தாண்டி வீட்டிற்குள் சென்றார் தாழ்வாரத்தில் தன்மனைவி இல்லை. சமையல் அறைக்குச் சென்றார் ஐயர். சென்றவர் திடீரென்று அலறிக் கொண்டு, ஏ! கருப்புச்சட்டைக்காரா! காவாலிப்பையலே! ஐயோ மோசம் செய்து விட்டானே. பிடி பிடி என்று உள்ளிருந்து கத்திக்கொண்டு கையில் ஒரு கம்புடன் வெளியே ஆத்திரத்துடன் ஓடிவந்தார். காரணம் அவர் (கோயில் குருக்கள்) மனைவி பிணமாக அங்கே கிடந்தாள். கழுத்திலேயிருந்த நகைகளைக் காணோம். அவள் கழுத்தை யாரோ திருகி இருக்கிறார். அவ்வளவுதான் அச் சவத்திலிருந்து அறிய முடிந்தது.

எந்தசண்டாளன் செய்தானோ ஆனால் இது வேலனுக்குத் தெரியாது. விக்கலுக்கு தண்ணீர் கேட்க சென்றவன் கதவைத்திறந்தானே ஒழிய வீட்டிற்குள்ளே கூட போகவில்லை. ஆனால் ஐயர் சும்மாவிட்டாரா? அல்லது அவன் வார்த்தையை நம்பாது பத்து அடியாவது அடித்துத்துரத்தினரா? இல்லை. அவனை கோர்ட்டிலே கொண்டு வந்து நிறுத்தினர். அதோடு மட்டுமல்ல. அவன் தான் தன் மனைவியின் நகைகளை திருடப் போயிருக்கிறான். ஆனால் அவள் இவனை எதிர்த்திருக்கிறாள். அதனால் அவளை கொன்றுவிட்டான். கொன்றவன் இவன்தானே ஒழிய வேறு யாருமில்லை. இவன் கொன்றுவிட்டு வீட்டுக்கதவை சாத்திக்கொண்டு வெளியேபோக எத்தனிக்கும் போது தான் இவனை பிடித்துக் கொண்டதாக சாதித்து விட்டார் ஐயர். அதற்கு பக்கத்து வீட்டுக்கார பரந்தாமனும், அண்டை வீட்டுக்கார அனந்தராமனும், எதிர்வீட்டுக்கார ஏகாம்பரனும் சாட்சிகள். ஆனால் ஏழை பக்கம் சாட்சியேது? வாதிக்க வக்கில் எது? இப்போதைய உலகில் பணமில்லா விடின் சாட்சியேது? கோர்ட்டு எது? நீதியேது? அவ்வித மிருக்க நமது வேலன் என் செய்வான்? ஆகவே தீர்ப்பு! தூக்கு!!! ஆம் குற்றமேதும் செய்யா வேலனுக்குத்தான் தூக்கு.

ஆம் ஐயர் பொய்சொல்லுவாரா? அதிலும் கோயில் குருக்கள். ஐயர் வாக்கு தேவவாக்கல்லவா? அட அவனும் செஞ்சிருப்பான்! பிச்சைக்கார நாயிக்கு கருப்புச் சொக்கா ஏதுக்கு? அந்த கூட்டமே இப்படித்தானே! இது ஊரிலே பேச்சு. ஆனால் அந்த கும்பலிலே அவனைப் பற்றி நினைப்பவர்கள் யாரேனும் உண்டா என்றால் உண்டு. அவன் தான் நமதுத் தொண்டன் தோட்டண்ணன்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

'காலரா' என்ற கொடிய விஷபேதி கிராமங்களில் பரவுங்காலங்களில் கிராம மக்கள் கிராம தேவதைகளுக்குக் கிடாய்கள் வெட்டிப் பொங்கலிட்டுப் படைத்து இரவெல்லாம் கொட்டு முதலியன முழக்கி, வில்லடித்து ஆடிப்பாடி விழித்திருந்து பனியில் நனைந்து பக்குவமாகச் செய்யப்படாத உணவு உண்டு சுகத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறதனால் விஷபேதி ஒழிய பூசைகள் நடத்தும் இவர்களுக்கே விஷபேதி கண்டு வித்வதுமுண்டு!

'வைசூரி' என்ற நோய் அம்மனது விளையாட்டால் உண்டாவது என்று மக்கள் கூறுவர். அம்மை விளையாடுகிறதாலேயே அவளுடைய பிள்ளைகள் கண், காலை யிழந்து உயிர் நீங்கி சொர்க்கத்திற்குப் போகிறார் போலும்! அந்த அம்மை கோபங்கொண்டு சண்டையிடத் துவங்கிவிட்டால் எவ்வாறாகுமோ?நல்ல தழும்புஉண்டாகும்படி 7 ஆண்டுக்கொருமுறையாக 3 தடவைகள் 'இனகுலேஷன்' செய்துகொண்டவர்களிடம் அம்மை விளையாடமாட்டேனென்று சொல்லுகிறாளே! ஏனோ? அப்படி வருத்தத்துடன் சம்மதித்து விளையாடினாலும் குரூரக்கோரணிகள் செய்யக் காணோமே! ஒருவேளை 'வாக்சி நேட்டர்'களுக்கு அம்மன் பயப்படுகிறாளோ?

தோழர்களே! இவையனைத்தும் பார்ப்பனக் குருக்கள் தாங்கள் வாழ, தங்கள் இனம் உய்ய ஏற்படுத்திக்கொண்ட தற்பாதுகாப்புகளே என்பதையும், திராவிட மக்களின் பலவீனத்தை முதலீடாக்கி தங்கள் சுய வியாபாரத்தை பகற்கொள்ளையையிடக் கொடிய வியாபாரத்தைப் பெருக்கத் திட்டமிட்ட பார்ப்பனர்களின் ஆவல் இதுவரை வெற்றிகரமாகவே நடைபெற்று வந்திருக்கிறது என்பதையும்... இக்கட்டுரை உங்களுக்குத் தெளிவுபடுத்தி யிருக்கும். மக்கள் சமுதாயத்தை மிரட்டி விடும்—அறிவையே வாதுக்கு இழுக்கும்—இவ்வித முக்கியப் புதிர்கள் விடுவிக்கப்படத்தான் இத்தகையைக் கட்டுரைகளை எழுதிவருகிறேன்: இவையெல்லாம் எனது பரப்பறிவை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக எழுதியவையன்று! எண்ணற்ற பாமர மக்கள்—ஒரு சில படிக்கத் தெரிந்த அறைகுறைகள் இன்னும் அறியாமையிலேயே மூழ்கிக் கிடப்பதால் அவர்களது சிந்தனைக்கு வேலை கொடுத்து அவர்களது மயக்கத்தை தெளியவைக்கத்தான் இவைகள்!

மக்களது அறிவு வளர—சிந்தனையின் பொன்னொளி எங்கும் பரவ—அறியாமை அந்தகாரம் ஒழிய பேய் வணக்கம் போன்ற சதிச் செயல்கள் ஒழிக்கப்பட்டாக வேண்டும். மக்கள் தம்மையே தாம் எண்ணிப்பார்க்கும் திறம் பெற்றுவிட்டால் போலிக் கட்டுப்பாடுகள் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது—குருட்டுத்தனமான வேலிகள் அவர்களைத் தடுக்க முடியாது. அப்பொழுதுதான் மனிதயத்துவத்தைக் குலைத்து சீரழியவைத்து, மனிதரை மண்டூகங்களாக்குகிற பேய் வணக்கம் போன்ற மடத்தனங்கள் மாண்டு மடிந்து போகும்!

இவை 'ஏற்பட பார்ப்பனீய ஒழிப்பு' இதற்கு முதற்படியாக அமையவேண்டும் என்று நாவலிக்கிறோம், பகுத்தறிவியக்கத்தினராகிய நாங்கள்.

ஒழிக பேய்வணக்கம் போன்ற மடத்தனங்கள்!

பார்ப்பனீய அட்டூழியத்திற்குச் சவுக்கடி

மா. இளஞ்சேரன்.

திட்டத் தெரியாது திட்ட! ஆனால், அவ்விதம் திட்டுவோரை ஒழுங்குபடத் திருத்தியமைக்கத் தெரியும்.

"திருத்தியமைக்கத் தெரியும்" பிறரைத் திட்டவேண்டியதற்கு அவர் முரண்பாடாக நடந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவரைத் திட்டவேண்டியதாய் நேரிடும். ஆகவே அவ்விதம் திட்ட வேண்டியவர் பல சமயங்களில் வாயில் வார்த்தைகள் நடமாடும் வரைத் திட்டவேண்டியதாய் நேரிடுமல்லவா? ஏன்? அந்தக் கவலையே தேவையில்லை யென்று நீட்டியுள்ளார். ஆனால், அவ்விதக் கவலை தங்களுக்குத் தான் அதிகமாக இருக்கிறது. அதாவது எங்களது சு. ம. க்காரர்களைத் திட்டக் கிளம்பியுள்ளார்கள். ஆகையால் அவ்விதமான திட்டைக் கேட்பதற்கு எங்களது சு. ம. தாள் தானா? கிளம்பப் பட்டிருக்கிறது, ஆக, நல்லவர்களும் தீயவர்களும் நன்கு ஒழுங்குபடத் திருந்த வேண்டுமானால் சு. ம. தாள்களை வாங்கிப் படித்து தாங்கள் முன்னேற்றம் அடைவதற்குத் தக்கதொரு வழியை அமைத்துக் கொள்ளக் கூடும்.

ஆம்! சு. ம. தாள் சாதாரண இடத்திலிருந்து வருவதில்லை, பின் எங்கிருந்து வருகிறது என்றால், பகுத்தறிவு என்று உரைக்கப்படும் இருதயத்திலிருந்து கிளம்பி அவை ஆறுவது அறிவு ஆகிய பகுத்தறிவுக்கேற்ற நீதியாக வருகிறது. ஆக, இது சாதாரணமாக இருக்காது. யாவற்றிலும் மேலானதாகவே இருக்கும். அதுவும் திராவிட கழகத்தார் நீதிக்காகப் போரடுபவர்களாகவே இருப்பார் இதுவரையிலும் சு. ம. பத்திரிகையை யாரும் அதிகம் தூற்றியதில்லை. ஆனால், சமீபகாலமாக சில தாள்கள், இருப்பதையும், இல்லாத வற்றையம், நடப்பதையும், நடக்காதவற்றையும், கேட்பதையும் கேட்காதவற்றையும், செய்வதையும், செய்யாதவற்றையும், ஒன்றெனக் கருதித் தீட்டி வருகின்றார்கள். ஆக நன்கு சிந்தித்து நிதானமாக தீட்டு ஏ, புத்திகெட்ட சண்டிப்பத்திரிகையே! கேள், நீர் பத்திரிகையில் தீட்டுவதைத் தவிர செய்கையில் யாது தான் செய்ய முடியும்? எதாவது தெரியுமா? எல்லாம் வாயளவில்தானே! பேடியின் கரத்தில் போர் வீரனின் வாளைக்கொடுத்தால் அவ்விதமான போரானது வெற்றிபெருமா? வெற்றி அடைவது தான் நிச்சயமா? உமது பத்திரிகையில் தீட்டுவதைத் தவிர உம்மால் "மேடைப்பேச்சில்" தான் பேசமுடியுமா? எல்லாம் திறை மறைவிலிருந்து செய்வது தானே! அதுவும், உமது முகத்தை நிமிர்ந்துப் பார்த்துப் பேசாது குனிந்து பார்த்துக்கொண்டே ஏதாவது உளறிவிடுவாய்!

ஆகவே, நீர் எங்களை அப்படி "தீட்டுவதைத் தீட்டு!, திட்டுவதைத் திட்டு! பேசுவதைப் பேசு! தடுமாறுவதைத்தடுமாறு!!" என்று தர்பை ஏந்திய நீ எவ்வாறு உரைக்கலாம்,

ஆம்! உம்மிடம் ஆணவமும் அதிகாரமும் சர்க்காரும் உமது பக்கம் இருக்கும் வரை நாங்கள் செய்யக்கூடியதற்கும் தீட்டக்கூடியதற்கும், பேச வேண்டியதற்கும் ஆகிய அனைத்திற்கும் உமது அதிகாரத்தினால் தடைவிதிக்கலாம் என்ற தைரியம் போலும்!

ஆனால், நீர் மட்டும் அட்டூழியங்களை வளர்த்துக்கொண்டே போகலாம். அதை யாராவது கேட்பதற்கோ, கண்டிப்பதற்கோ கூடாது. அதைச் செய்யாமலிருக்க உமது சுய அறிவு வரும் வரை செய்து கொண்டே இருப்பாய். அதுவரையிலும் உன் ஆணவ அதிகாரத்தைக் கொண்டு தீட்டிக் கொண்டே இரு. காரணம் பகுத்தறிவு இல்லாமைதான் (உதாரணமாக) அண்ணா அவர்கள் எழுதிய கம்பரசம் என்ற நூலை காமரசம் என்றும், அதில் எழுதியிருப்பது தவறு என்றும் அத்தகைய நூலை எழுதிய அறிஞரை காமம் பிடித்தவர் என்றும், எழுதுகிறாயே ஏன்? இது தான் உமது பகுத்தறிவா? என்று கேட்கிறேன்?

மேலும், உமது எழுத்துக்களில் பகுத்தறிவுற்கு வேண்டிய கருத்துகளில்லாமையேதான், ஆக, உம் அறிவான துஐந்து அறிவுபடைத்த மிருக அறிவும் கீழ்த்தரமானதே என்பதில் ஐயமில்லை. உமது அறிவும் மூடத்தனமான வழியிலேயே இருப்பின், உண்மையை உள்ளபடி உணர்ந்து தீட்டு?

ஏ! முப்புரிதரித்த ஆரியனே! நீரும், உமது இனமும் சிந்து நதி

4-ம் பக்கம் பார்க்க

பேய் வணக்கம்!

— தனமனோகரன் —

"யாதும் ஊரே யாவரும் கேளீர்!" என்ற பரந்த மனப்பான்மையையும், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற உயரிய தத்துவத்தையும் உலகுக்கு அளித்தது நமது திராவிடம். இத்தகைய பெருமைகளைப் பெற்றிருந்த திராவிடத்தில்தான் நாம் இன்று பலவகையான சாதிகளைப் பார்க்கின்றோம்! பார்ப்பனர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வசதிகள் பலவற்றைச் செய்து கொள்ளுவதற்காக தங்களை உயர்த்தி, பூசுரர்கள் என்று கூறிக் கொள்ள, திராவிடரைத் தாழ்த்தி, சூத்திரர் என்று அழைக்க பல வகையான சாதிப்பிரிவினைகளை ஏற்படுத்தி, திராவிட மக்களுக்குள் பிளவை ஏற்படுத்தினர். இதன் காரணமாக ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற பண்பாடு நாளடைவில் மறைந்து பல கடவுள்கள் தோன்ற வழி ஏற்படலாயிற்று- பேய் வணக்கம் போன்ற அறிவற்ற செய்கைகள் பிறக்கலாயிற்று.

மத்திய ஆசியாவிலே பிழைக்க வழியில்லாமல் பிச்சையெடுக்கும் கும்பலைப்போல, சொந்த நாட்டை விட்டு சுற்றித்திரியும் சோம்பேறிக் கூட்டமாகிய நாடோடிகளைப்போல ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு வந்து! ஆரியாவர்த்தம்' தோற்றுவித்து, அதில் குடியேறிய ஆரியக் கூட்டத்தினரால்தான் இப்பேய் வணக்கம் உண்டாயிற்று. அவர்கள் அவ்விடத்தில் குடியேறுமுன் அங்கிருந்த பூர்வீகக் குடிகளான திராவிடரை துரத்தியடித்தன. அவ்வாறு துரத்தப்பட்ட கருப்பு நிறமுடைய திராவிடர்கள், இராக்காலங்களில் ஆரியர் குடியேறியுள்ள பிரதேசங்களில் தீவட்டியுடன் திடீரெனப்பாய்ந்து ஓர் விதமான பயங்கரக் குரல் எழுப்பி அவர்களைப் பயமுறுத்திக் கொல்லுவார்கள். கரிய நிறமுடையோரா யிருந்தபடியால் இந்த ஆள் கொல்லிகளைப் பிசாசுகள் என்றெண்ணிப் பயப்பட்டு வந்தனர். சிறியோரிலிருந்து பெரியோர் வரை கூட இந்தப் பேய்களுக்கு அஞ்சி வந்தனர். எல்லாவிதமான துஷ்ட பிசாசுகளும் மனிதருக்கு இன்னல் விளைவிக்கும்படியாயும் அவர்கள் செய்யும் நற்கிரியைகளைக் கெடுக்கும்படியாயும் அலைந்து திரியும் என நம்பிவந்த காரணத்தால், தெற்கே பார்த்த வாசல் உள்ள வீடுகளில் பேய்கள் புகுந்துவிடுமென்று நினைத்து, வடக்கே பார்த்த வாசல்கள் வைத்து ஆரியர்கள் வீடுகளைக் கட்டிவந்தனர். ஆரிய கலாச்சாரங்கள் பிற்காலத்தில் திராவிட கலாச்சாரங்களை நசுக்கி மேன்மையுற்று விட்டபடியால் இந்த முறையை திராவிட மக்களும் பின்பற்ற ஆரம்பித்தனர்- பேய், பூதம் இவற்றில் நம்பிக்கை வைக்க முற்பட்டனர். பார்ப்பனர்களின் சுயவாழ்க்கைக்கு இது ஒரு ஏற்ற சாதனமாக அமைந்தது.

அவைகளின் தோற்றம்.

"ஊரினில் பேயர் கொண்டிருந்து
செத்தவர்க்கும்
உளவுபோய் மடிந்தகாமுகர்க்கும்
உயிர்விடவலிய நான்று கொண்டவர்க்கும்
உவந்து தீப்பாய்ந்த நீலிகட்கும்
பாரினில் கணவன்றனக் கடங்காமல்
பதைத்திட நஞ்சினைத் தின்றும்
படுங்கயத்தினிலும் ஆற்றினும் விழ்கப்
பைசாசுருவான பாவிகட்கும்
போரினிற் படையில் பட்ட வீரருக்கும்
புராதனத் திருந்த மன்னவர்க்கும்
புலையர் சக்கிலியர் குறவர்களினப்
புதரையர் கழுவிலேறிகட்கும்
தேரினும் கோவிற் புறத்தினு நடக்குந்
தெருவினைச் சிலை அடித்திடுத்தித்
தேவனென்றிருந்த பாவியான்"

என்றும் அவைகளின் பெயர்

"அய்யனர் வீரபத்திரன் இருளன்
அதுமந்தன் கால சங்காரன்
பொருதடிமாடன் கறுப்பனனிடும்பன்
புத்தனர் காத்தவராயன்
பொம்மன் ரெட்டியச்சின்னுடன்
சக்கதேவி
பொன்னியங் காளிகங்காளி
பெரியமாகாளி ரணபத்திரகாளி
பேச்சி சாமுண்டித் தண்டி
பீல்விவாய்க்குறளி ஏகரி வீரி
பிடாரி காட்டேரி தூத்தேரி
ஏரிதழன் மாரி வராகியோங்காரி
எமகண்டி சாமளை துர்க்கை
இன்னமுமனந்தம் பேய்களைப் பணிந்த
ஏழைநான்"

என்றும் சொல்லியுள்ள ஆன்றோர் வாக்கால் அறியத்தகும்.

திருவனந்தபுரத்தில் நடந்த சண்டையில் கொல்லப்பட்ட ஒரு வெள்ளையரையும், பிரயாணம் செய்யும்பொழுது அவ்விடத்தில் விஷபேதிகண்டு இறந்துபோன மற்றொரு வெள்ளைப் பாதிரியாரின் மனைவியையும் அங்கு வாழ்ந்து வந்த மக்கள் தெய்வங்களாகக் கருதி வணங்கி வந்தனர். இறந்துபோன வெள்ளையருக்கு பிராந்தியும் சுருட்டும் பிரியமான பொருள்களென்று கருதி அவற்றை அவருடைய சமாதிக்குப் படைப்பார்கள்! ஒவ்வொரு பிசாசின் குணத்திற்குத் தக்கதாகச் சிலவற்றிற்கு எருமைக்கிடா, சிலவற்றிற்குப் பன்றி, சிலவற்றிற்குக் கிடாய், மற்றுஞ் சிலவற்றிற்குப் பிண்ணாக்கு, கருப்பட்டி முதலியவைகளையும் படைப்பார்கள்! சற்றேறக் குறைய எல்லா மக்களுடைய வீடு, கொல்லை, தோட்டம், தோப்பு, நன்செய், புன்செய் இவற்றிலெங்கேயாவது மண் பீடம், குத்துக்கல், பாறை அல்லது மரம் இவற்றிலொன்றினால் நிலையம்போட்டு அவைகளில் மேற்கண்ட பொருள்களைப் படைப்பிட்டு வணங்கப்படாத பேய் இல்லையென்று பெரும்பாலும் கிராமத்திலுள்ள மக்கள் இன்றும் ஒப்புக்கொள்ளுவார்கள். கிராமங்களில் வசிக்கும் பெரிய பண்ணைகள், மிராசுகள் தங்களிடமுள்ள வேலைக்காரர்களிடம் பூசைக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்துத் தங்களுக்காக அந்தப் பேய்களுக்குப் பொங்கலிட்டுப் படைத்து வேண்டிக்கொள்ள சொல்லுவார்கள். ஒரு பெண் பிரசவிக்கிறபோதாவது, பிரசவித்துப் தீட்டுக்கழியும் முன்பாவது அவள் இறந்துபோனால், அவளுக்குப் பின் இரண்டாந்தாரமாக அவள் கணவன் திருமணம் செய்து கொண்ட பெண்ணுக்கு நோய் வருங்காலத்தில், முன்பு இறந்துபோனவள் தாலியும் சேலையும் வேண்டுமென்று மூலையிலே நின்று கொண்டு பேயாடுவாளாம்! எனவே அவளை சமாதானப் படுத்த கன்னிக்குவைக்கிறதென்று, பொங்கல் வைத்து மாமிசங்கள் பல பொறித்து வைத்து பூவும் சேலையும் அதனுடன் வைத்து வணங்குவார்கள். சாதாரணமாக வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் இவ்வாறு செய்வது இன்றும் பல வீடுகளிலிருந்து வருகிறது.

தைமாதம் வெகு முக்கிய மாதமாகக் கருதப்படுகிறது. உயர் வகுப்பினர் என்று கூறிக்கொள்ளும் பார்ப்பனர்கள் பேயாடுவதற்குச் "சாஸ்தாப்பிரீதி" என்பார்கள்! காடுகளிலும் மரங்களிலும் வாழ்ந்து வருகிற பேய்கள் வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் அலைந்துதிரியுமென்று கருதி விறகெடுப்போர், மரம் வெட்டிகள் முதலானோர் மலைப்பக்கமோ, காட்டுப்பக்கமோ போகமாட்டார்கள்.

மலைக்கு மாடுமேய்க்கப் போயிருந்த தங்கள் கணவருக்கு உணவு கொண்டுபோன (சக்கிலியப்) பெண்களை இச்சித்து, தொடர்ந்து சென்று பலாத்காரமாய் சல்லியம் பண்ணி, மாட்டிறைச்சி தின்று மாடுமேய்க்க ஒப்புக்கொண்டு, அப்பெண்களை மணந்துகொண்டு பின் பொருகாலத்தில் நிகழ்ந்த சண்டையில் மடிந்த பார்ப்பனனாகிய பட்டராயனையும், சொரிமுத்து அய்யன் என்ற வேறொருவனையும் மற்றுஞ் சில பேய்களையும் வணங்குகிற இடத்துக்கு நாளடைவில் 'சொரிமுத்து அய்யன்' கோவிலென்று பெயர் ஏற்பட்டது. ஆடி, அமாவாசை காலங்களில் ஏராளமான மக்கள் அவ்விடத்திற்குப் போய் வணங்குவார்கள். அங்கு பேயாடும் பேயாடிகள் மஞ்சணையையும், மஞ்சளையும் முகத்தில் பூசிக்கொண்டு, இரும்புச் சங்கிலிகளைக் கொண்டு தங்கள் மார்பிலடித்து, மேளவாத்தியங்களுடன் வில்லடிக்கிறவர்கள் முன் ஆடி அலறுவார்கள்—நெருப்பில் குதித்து நெருப்புத்தணலை மற்றவர்கள் பேரில் வாரி எறிவார்கள்—அருகிலுள்ள ஆற்று நீரிலும் ஈரமணலிலும் மிதித்துக்கொள்வார்கள்! விளக்கு ஏற்றுகிற இருட்டோடு இச் செய்கைகள் முடிவுபெறும். இதற்கு சாமிமார் பூக்குளிப்பதென்பார்கள். புகைச்சலும் அலறுகிற சத்தமும் நரகத்தின் முன்னடையாளமென்று கூறுகிறார்கள்! கடாக்களை வெட்டிச் சமைத்துப் படைத்து அவற்றைச் சாப்பிடுவார்கள்! தின்றவை ஜீரணமாக மது அருந்துவார்கள்! இதற்குப் பாவாடை போடுகிற தென்பார்கள்! ஏழைப் பிசாசுகளுக்குப் பிண்ணாக்குங் கருப்பட்டியுந்தான் கிடைக்கும். வெட்டப்பட்ட மிருகங்களின் குருதியை பேயாடிகள் குடிப்பார்கள். குருதி குடித்தால் சாமி மலையேறி விடுமாம்! பார்ப்பனப் பேயாடிகள் சந்தனத்தைக் கரைத்து குடிப்பதாகக் கூறி மக்களை ஏமாற்றுவர்.

இந்தப் பேய் பிசாசுகளுக்குக்
கள்ளுடன் சாராயங்களைப் படைத்து
கடாக்களை ரணபலி கொடுத்து
கனக்க மாடுகள் சேவல்களடித்து
கடலின் மீன் வகைகளும் பொரித்து
எத்தனை விதமோ செய்தும்
தள்ளி நீ போடா! குறைகளுண்
டெனவே
சடுத்த மிட்டலறி"

வருந்தி கோபங்கொண்டு நொந்திருக்குவாம்! பானையிலே பதக்கு உண்டானால் மூலையிலே முக்குறுணி பேய் வந்திடும் என்று கூறுவர். அயலூரான் பேய்க்கு அஞ்சான். "தன்னையறியாது பேயாட்டம் வருமா?" என்று பலவாறு சொல்லிக் கொண்டபோதிலும் மக்கள் பேயாடிகளிடம் குறி கேட்பார்கள். பேய்களினுருவத்தை பார்வைக்குப் பயங்கரமானதாக இருக்கும்படி கோரமான உருவங்களில் செய்வார்கள். பேயாடிகளும் பயங்கரமான உடைகளுடன் காணப்படுவார்கள்! கையில் வெட்டுக்கத்தி, காதில் குண்டலங்கள், உடலில் கருப்பு உடை, இடையில் ஒரு சிகப்புக்கச்சை, நெற்றியில் ஒரு பெரிய சாந்துப்பொட்டு, ஒரு கையில் உடுக்கு, காலிலும் கையிலும் சதங்கை, பரட்டையாக வைத்த தலை, கழுத்தில் வேப்பிலை, இவைதான் இவர்களுடைய 'மேக்கப்'! 'மிரண்டவன் கண்ணுக்குஇருண்டதெல்லாம் பேய்' 'அஞ்சினவனுக்கு அகப்பைக் காம்புப் பேய்' என்று மக்கள் பேயைப் பற்றி அஞ்சாதவர்கள்போல் தீரமாய்ப் பேசுவார்கள். ஆனால் உள்ளூர அவர்களுக்குப் பேயிடம் அச்சம் அதிகம்!

தங்களுடைய அங்க சேஷ்டையாலும் வேறு சில முகாந்திரங்களினாலும் உண்டாகிற 'நயிட் மேயர்' என்னும் சொப்பன ஸ்கலித நோயை மோகினிப் பிசாசின் சேஷ்டை யென்றும், பல காரணங்களால் உண்டாகிற இஸ்டீரியா; என்னும் சூதக சன்னி நோயைத் தொட்டியான் என்னும் பேய் தொட்டிருக்கிற தென்றும் சொல்லி நோயாளியை துன்பப்படுத்துவார்கள். செல்வந்தர்களின் வீடுகளில் ஒரு மனிதனுக்கு நோய் வந்தால் சோதிடருக்கும் பேய் பிசாசுகளுக்குப் பலியிட்டு சாந்தி கழிக்கிறவர்களுக்கும் விபூதி மந்திரித்துத் தகடுகள் கட்டிக் கோரணிகள் பல செய்கிற மந்திரக்காரருக்கும், இன்னும் அநேக பார்ப்பனப் புரோகிதர்களுக்கும் பிழைப்பு நடக்க வழி பிறக்கும். இக்காரணங்களால் நாட்டு வைத்தியரும் தனக்குக் கிடைக்கும் வருவாயை இழக்காதிருக்க சோதிடமும், ஆருடம் முதலிய தொழில்களும் தெரிந்ததாக பாவனை பண்ணுவார்கள். இத்தகையக் காரணங்களினால் நோயாளி நோய்கண்ட ஆரம்பத்திலேயே ஆங்கிலேய வைத்திய முறை தெரிந்த வைத்தியர்களிடம் வருகிறதில்லை. நோய்கண்டவுடனே பலவிடங்களில் உள்ள பேய்க் கோவில்களுக்குச் சென்று பூசைகள் பல செய்வர்.

(5ம் பக்கம் பார்க்க,)

ஏணியின் ஏக்கம்

[லெ. அழகப்பன்]

"மிகவும் நல்லவன் தான். என்ன செய்யலாம்? அவன் தலைவிதி அப்படி ஆயிற்று. கீழ்சாதியிலே பிறந்திட்டாலுங்கூட பெருந்தன்மை, அடக்கம், பணிவு முதலிய நற்பண்புகளைக் கொண்டுதான் விளங்கினான்" என்று ஏதேதோ சொல்லிவிட்டு அவரவர்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள் மக்கள், பகுத்தறிவு படைத்தவர்கள்,

எனக்கு என்னமோ அவரைப் பற்றி அதிகக் கவலையும், துக்கமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. கவலையைச் சுற்றுப் புறங்களிலே சுற்றிப் பல பேர்களைப் பார்த்தாகிலும் சரிப்படுத்திக் கொண்டு அமைதியாக இருக்கலாமோவென்றால், அவர்கள் என்னை அறையிலிட்டு அடைத்து விட்டார்கள், அவர் மறைந்தவுடனே.

மக்கள் எல்லாம் செய்நன்றிஅறியாதவர்கள் என்பதில் எள்ளளவும் ஐயப்பட வேண்டியதே இல்லை, பணம் படைத்த உயரப்பர்கள் தான் கடமையை மறந்தார்களென்றாலும் பாட்டாளிகளான ஓடப்பர்களாவது அவர் குடும்பத்திலுள்ளோர்க்கு உதவி செய்ய முன்வந்தார்களா? இல்லை. அவர்கள் தான் மிராசுதாரரின் கட்டளைக்கும், செல்வத்திற்கும் அடிமையாகி விட்டார்களே.

அமாவாசை இருட்டிலும் இடி மின்னல் காற்றோடு கூடிய மழையிலுங்கூட எத்தனையோ தடவைகளில் என்னையும் சுமந்துகொண்டு, தீப்பெட்டி நனைந்துவிடக்கூடாதே என்ற அச்சத்தினால் அவரது வேஷ்டியினுள்ளே வைத்துக்கொண்டே மூலை, முடுக்குகளில் இருளைப் போக்கி வந்த பணியை, இப்பொழுதுதான் கிராமத்தாரில் சிலராகிலும் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். நாங்கள் தடுமாறி விழுந்தது எத்தனை தடவைகளென்றும் யாருக்குத் தெரியும்? இதற்கு முன் எவ்வளவோ பேர் இப்பணியைச் செய்தார்களென்றாலும் மண்ணெண்ணெயைக் குறைத்து ஊற்றி விட்டுச் சுங்கந்தட்டுவதும் விளக்கிலுள்ள சாமான்களை எடுத்து விற்றுவிட்டு, களவு போய்விட்டதென்று சொன்னவர்கள் தானிருந்தார்கள்.

கூலிக்கு மாரடிக்காது. பணியென்று எண்ணிப் பலகாலம் உழைத்து உருக்குலைந்த உத்தமன் உடையப்பனது முடிவு தன் உறவினர்கள் கையாலேயே ஏற்பட நேர்ந்தது. உறவினர்களென்றிருந்தும் பணத்திற்காக விபீஷணத் தொழிலைக் கைக்கொண்டு கொன்றார்கள். உண்மை அவர்களுக்கு என்ன தெரியும்?

மிராசுதாரர் மகள் மீனா உடையப்பனோடு உட்கார்ந்திருந்தது உண்மை. நானும் பக்கத்திலே காத்துக் கிடந்தேன். மீனா அந்தச் சந்திற்கு நாங்கள் வந்ததும் கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு வருவதும், வீண் வம்பு பேசுவதும் வழக்கம், உடையப்பருக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டு விடும். காரணம் தீண்டப்படாத சாதியிலே பிறந்து விட்டது தான். நடுக்கம் அவரை அதிகம் பேச விடுவதில்லை. சீக்கிரமே வேலையை முடித்துக் கொண்டு புறப்பட்டுவிடுவது வழக்கம். புறப்பட்ட பின்னரும் மீனாவின் சரசத்திற்கு முடிவு இருக்காது. எத்தனை தடவை அவர் மீது எறிந்த கொய்யாப்பழங்கள் என் மீது விழுந்திருக்கின்றன வென்பது யாருக்குத் தெரியும்?

அமாவாசை முதல் நாளிரவன்று வேண்டுமென்றே வாசற்படியிலிருந்து வாய்க்காலின் கீழே வழுக்கி விழுவதே போன்று பாசாங்கு செய்தாள். உண்மையிலேயே மீனாளது பாதங்கள் மடங்கிவிட்டன. உடையப்பர் தன் சாதியையும் தீண்டாமையையும் எண்ணாது மீனாளைத் தூக்கி விட்டுப் பாதங்களைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தார். தற்செயலாக வெளியே வந்த மிராசுதாரர் மீனாக்ஷி சுந்தரமய்யர் உடையப்பனைத் தவறாக எண்ணிவிட்டார். அத்துடனிருந்தாரா? உடையப்பர் மீது வீண்பழியைச் சுமத்தி, அவருடைய உறவினர்களைக் கொண்டே உயிருக்கும் உலை வைத்து விட்டார். உடையப்பரது இளம் மனைவியும், கைக்குழந்தையும் படும்பாடு யார் உணர்கிறார்கள்? பாழ்பட்ட சமூகம் கவனிக்குமா? பணத்தையே பெரிதாக எண்ணி ஆண்டே என்று கூறிக்கொண்டு அடிமைக் குழியிலே மூழ்கிக் கிடக்கின்ற சமூகத்திற்கு என்ன கவலை ஏற்படப் போகிறது?

"வயல் மர, வாதிலே கட்டியிருக்கிற தொட்டியிலே உடையப்பன் குழந்தை அழுதுகிட்டே கிடக்கு அவளோ நாத்து நட்டுகிட்டு இருக்கா, பாவம். அவள் என்ன செய்வாள்" இது இரக்கமுள்ள பெண்கள் போகிறபோது பேசுகின்றமொழிகள்

பாட்டாளிகளான ஓடப்பர்களெல்லாம் உயரப்பர்களாகி ஒப்பொப்பர்களாக்கச் சிந்தனைச் சிற்பிகளது தொண்டு என்ற ஏணி தேவை, நானும் ஏணிதான். என்றால் என்ன செய்யக்கூடும்? அடுத்த கூலியாள் வந்தால் முன்போல முனிசிபல் லாந்தர்களை வெளிச்சமுண்டாக்க முடியும். மிராசுதார் கைமாறினால் வேறு பல. சில்லரைத் தொழிலிற்கு உபயோகமாக முடியும்.

பொழுது போக்கு

[மா. சு.]

1. கதர்ச்சட்டை:—நீங்கள் கும்பகோணத்தில் என்னமோ போராட்டம் நடத்தினிங்களே! அதில் சர்க்கார் என்ன செய்தது?

கருப்புச் சட்டை:—என்ன செய்ததா? "கும்பகோணம்" செய்தது!

2. அவர்:—சாஸ்திரியார் தலமேலே என்னமோ நடக்குதாமே?

இவர்:—அவர் சிக்குப்பிடிச்ச தலைமேலே என்ன நடக்கும்? பேன்தான் நடக்கும்!

அவர்:—நீங்க என்ன தோழரே! அவர் தலைமையிலே நடக்கிற கூட்டத்தைப் பற்றிக் கேட்டால்........

இவர்:—ஓ! கூட்டமா! 'சுஜாதி மித்திரனை' இரவல் வாங்கி 'முக்கிய நிகழ்ச்சிகள்' என்ற தலைப்பிலே பாருங்கள் தெரியும்.

3. சே இந்து:—உங்க கும்பலிலே பணக்காரன் எவனாவது சேருகிறானா? எல்லாம் சுத்த அண்ணக்காவடிகள்!

தோழர்:—இது பட்டினிப் பட்டாளமப்பா! பணக்காரனுக்கு இங்கே என்ன வேலை?

4. கதர்:—தமிழனுக்கு காங்கிரசிலே மதிப்பில்லே! என்று கத்தனிங்களே! காமராசர் அ. இ. கா காரியக் கமிட்டி அங்கத்தினராக்கப் பட்டிருக்கிறார், தெரியுமா?

கருப்பு:—அது மட்டுமா? தமிழ் நாட்டிலுள்ள ஒரு மரத்தைச் செதுக்கிக் கொண்டுபோய், வட நாட்டில் ஒரு கைகாட்டி நட்டிருக்கிறார்களாம்! அதைப்பற்றிக்கூட பெருமைப் பட வேண்டியது தான்!

5. ஸ்ரீமான்:—'தமிழ் தமிழ்; என்று ஆர்ப்பாட்டம் செய்கிறீர்களே! நீங்கள் தமிழுக்காக இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்?

தோழன்;—செய்தோமோ செய்யவில்லையோ! உங்களைப்போல, தமிழைக் கொலை செய்யவில்லை, அது மட்டும் உறுதி!

கருப்புச்சட்டைக்காரனா!
காசிருந்தால் சாக்கிக்குக் குறைவேது?

அ. வரதராசன்.

"காயமே இது பொய்யடா-காற்றடைத்த பையடா" என்ற பாட்டை பாடிக்கொண்டு ஒரு பிச்சைக்காரன், கையிலேவோடு எடுத்துக் கொண்டு தெருவழியே போகிறான். கால் சிறிது ஊனம். ஆகவே அதிகதூரம் நடக்க முடியாது. கையிலே ஒரு ஊன்றுக் கோல். இருந்தாலும் வேலை செய்து பிழைக்கத்தான் விரும்பினானே ஒழிய வேலை செய்யாமல் பிழைக்க விரும்பும் கும்பலைச் சேர விரும்பினானில்லை. ஆனால் அவன் தகப்பன் திருட்டுத்தனமாகச் சாராயம் குடித்து விட்டு ஒரு வீட்டிலே திருடினானாம். அதற்காக அவன் இரண்டு வருடம் சர்க்கார் விருந்தாளியாகப் போய் விட்டான். ஆகவே கால் ஊனமானவனும் தாயை இழந்து பிச்சை எடுத்து வருபவனுமான நமது வேலனுக்கு வேலை கொடுப்பார்யாருமில்லை, சொந்த ஊரிலே வேலை கிடைக்காத காரணத்தால் திருட்டு இரயில் ஏறி திண்டிவனம் சென்றடைந்தான். ஆனால் பிழைக்க வந்த இடத்திலே அவனுக்குத்தூக்கு!

வேலன் தெருத்தெருவாக பாட்டு பாடிக்கொண்டு போனான். ஒரு வீட்டில் சாப்பாடு கேட்டான். அன்னமிட்டாள் அவ்வீட்டுக்காரி. அடுத்த வீட்டில் ஆடைகேட்டான் அணிந்துக் கொள்ள. கருப்புச்சட்டை ஒன்றைக் கொடுத்தான் கருப்பண்ணன். அதற்கடுத்த அண்டை வீட்டில் எதாவது ஒரு கைவேலையை கேட்டான். நாளை வா என்று சொன்னார்கள். கிடைத்த உணவை சாப்பிட்டுவிட்டு சற்று இளைப்பாற இடம் தேடினான். உண்டவன் சற்று இளைப்பாற அருகிலிருந்த உண்ணாமலையம்மன் சன்னதிக்குச் சென்றான்—உட்கார்ந்தான். அடுத்தநிமிடம், "டே! கருப்புச்சட்டை உனக்கு இங்கு இடமில்லை, அதோ! தெருக்கோடியில் காவாலிப்பையல்கள் கூடும் சு. ம. சங்கம். அங்கே ஓடடா "என்று அதட்டினார் கோயில் குருக்கள், "ஐயோ! சாமி! நான் கருப்புச்சட்டைக் காரனுமல்ல—கதர்சட்டைக் காரனுமல்ல. நாதியற்று நாடோடியாய்திரியும் கும்பலைச் சேர்ந்தவன். உடுக்க உடுப்பில்லை என்றேன். இக்கருப்புச் சட்டையைத் தந்தார் அந்த கோடி வீட்டுக்காரர். உண்ண உணவில்லை என்றேன் என் வயிற்றுக்கு மீறிய உணவு கிடைத்தது. ஆகவே இங்கு சற்று இளைப்பாறலாம் என்ற நோக்கத்தோடு வந்தேனே ஒழிய வேறு ஒன்றுமில்லை, மன்னிக்கவும்" என்றான் வேலன். "போடா என்றால் பொத்தல் பேச்சு பேசுகிறாயே. ஓடடா என்றால் ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டாயே. நாதியற்ற பிணமே— நாஸ்திகனே—கருப்புச்சட்டைக்காரனே கடுகி ஓடடா இங்கிருந்து" என்று திட்டிக்கொண்டே ஒரு வாளித்தண்ணீரை அவன் மீது கொட்டப்போனார் குருக்கள். இதைக் கண்டு வெகுண்டெழுந்த வேலன், வாய் திறவாது கோயிலை விட்டிறங்கி, அத்தெருக் கோடியிலிருந்த திராவிடர் கழகத்தை போய்ச்சேர்ந்தான். சேர்ந்தவன் சற்று உறங்கினான். வழி நடந்த களைப்பு ஒரு பக்கம். திருடன் மகன் என்ற வாட்டம் மறு பக்கம். இதை எல்லாம்விட கோயில் குருக்கள் பேசிய கடும் வார்த்தைகள்—ஆகிய இவைகள் எல்லாம் சிந்தித்துக் கொண்டே படுத்தானானாலும் அடைந்த களைப்பால் நன்றாக அயர்ந்துத் தூங்கினான். படுக்கும் பொழுது பகல் மணி இரண்டிருக்கும்.

மணி நாலரை ஆயிற்று. கருமேகமே சூழ்ந்தாற் போலவும் — கருங்கடலே கொந்தளித்து வந்தாற் போலவும் ஒரு மாபெரும் கூட்டம் அங்கு கூடியது. கூட்டம் எதற்கு என்று வினவுகின்றீர்களா? ஆரிய தாசனான கம்பன் விழாவை கொண்டாடுவதற்கல்ல—களியாட்டம் ஆடுவதற்குமல்ல. அரசியலாரின் போக்கை எதிர்த்து அறப்போரைத் தொடுக்க தீர்மானம் கட்டத்தான் அவ்வளவு பெரிய கூட்டம் அங்கு கூடியது. அச்சமயத்திலே ஒரு தொண்டன் நமது வேலனருகில் சென்று "அண்ணே! அண்ணே!!" என்று தட்டி யெழுப்பி என்ன? இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாய்? கூட்டம் கூடப் போகின்ற காலமாயிற்று, எழுந்து கூட்டத்தை கவனி என்று மொழிந்தான் அத்தொண்டன். உடனே வேலன், அப்பனே...! நான் ஒரு பிச்சைக்காரன். அது மட்டிலுமல்ல. திருட்டு சாராயம் குடித்து, தேவருக்கு அடுத்தபடி இவ்வுலகில் இருக்கும் அந்தணர் வீட்டிலே அர்த்த இராத்திரியிலே திருடினவனின் மகன் நான். எனக்கொரு கூட்டமா? எனக்கொரு அழைப்பா?" என்று மறுமொழி கூறினான். இம்மொழிகளைச் செவியுற்ற அத்தொண்டன் "தோழனே! நானும் ஓர் ஏழைதான். அதுமட்டுமல்ல, எங்கள் கழகமே ஒரு ஏழ்மை கும்பல்தான். எங்கள் கழகத்தில் பார்ப்பான் கிடையாது—பறையன்கிடையாது. அதே நேரத்திலே பணக்காரனுங் கிடையாது—பஞ்சையும் கிடையாது. இதோடு நின்றுவிடவில்லை. எங்களுக்கு முப்பத்துக் முக்கோடி தேவர்கள் கிடையாது, அறுபத்தெண்ணாயிரம் ரிஷிகள் கிடையாது. ஒன்றே குலம்—ஒருவனே தேவன் என்ற கோட்பாடுடையதுதான் எங்கள் கழகம். ஆகவேதான் உழைக்காமல் உண்ணும் உலுத்தர்களும் எங்களிலே இல்லை. ஆனால் இயற்கையின் விளைவாக உனக்கு கால் ஊனம். பரவாயில்லை. நாளை இது நேரம் என்னை இவ்விடத்தில் சந்தித்தால் உனக்கொரு வேலை என்னால் கொடுக்கமுடியும். நான் ஒரு நெசவாளி. ஆகவே என் வீட்டில் உனக்கு நூல் சுத்தும் வேலை கற்றுக்கொடுத்து உன்னை என்னால் இயன்ற வரை ஆதரிக்கிறேன். உனக்கு சம்மதமானால் என்னை இங்கே நாளை சந்தி. கவலைப்படாதே. எழுந்து வந்து கூட்டத்தில் உட்கார்ந்து சொற்பொழிவைக் கவனி. உன் புண்பட்ட மனதிற்கு சற்று புத்துணர்ச்சி ஏற்படும். சலிப்படைந்த மனதிற்கு சந்தோஷம் தரும். எழுந்துவா," என அன்பு வார்த்தை கூறி அழைத்து வந்து கூட்டத்தின் ஒரு ஓரத்தில் அமர்த்தினான்.

குறிப்பிட்ட நேரத்தில் கூட்டம் ஆரம்பமாயிற்று. பலர் பல பாக்களைப் பாடினார்கள், அதன்பின் தலைவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். அரசியலாரின் அமைப்பை — போக்கை எதிர்த்து பல தீர்மானங்கள் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன. கூட்டமும் இனிது முடிந்தது. கூட்டம்

(7-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

லக்ஷம் ரூபாய் நக்ஷத்திரம்

—: (x) :—

[முன்னவாரத் தொடர்ச்சி]

[" பிவியார் "]

இனி அழுகிப் புழுத்து நாறி ஊரார் காரித்துப்ப அழியவேண்டியதுதான். தேவி என்னை மன்னிக்கமாட்டாயா! என் கண்ணுளா என் தவறைமறந்து மீண்டும் என்னை ஆட்கொள்ளமாட்டாயா? உன் திருவடிகளிலே தலை வைத்து உயிர் விடவாவது அருள் புரிய மாட்டாயா என்று வாய்விட்டுக் கதறினள். அதே சமயத்தில் கதவு தட்டும் சப்தம் கேட்டது. யாரது என்றாள். "முத்தண்ணு" என்று பதில்.

துடி துடித்தாள் தங்கம்மாள். "ஐயோ இந்தப் பேயிடமிருந்து இன்று எப்படித் தப்புவேன். இன்றுதானே தவணையின் கடைசிநாள்" என்று எண்ணிப் பதறினள் மானத்தைக்காக்க முடிந்தால் காப்பது; இன்றேல் அந்தப் பேயையும் கொன்று நானும் சாவது என்று துணிந்தாள். பன்னீரும் அத்தரும் ஜவ்வாதும் மணந்த அந்த உடலில் கற்பூரத் தைலத்தைக்கொட்டிக் கொண்டாள். சகிக்க முடியாத தலை வலியால் பாதைப் படுபவள் போல் நடித்தபடி மெதுவாகச் சென்று கதவைத்திறந்தாள், முத்தண்ணுவுக்குக் காட்சியளித்தது, அவன் எதிர் பார்த்தபடி சோபன சிங்காரியல்ல, அத்தரும் பன்னீரும் அவனுக்கு வரவேற்பளிக்கவில்லை கற்பூரத் தைலத்தின் சகிக்க முடியாத நெடி குப்பென அவனுடைய மூக்கில் பாய்ந்தது. மோகவெறியை தைலத்தின் வேகநெடி விரட்டி ஓட்டிவிட்டது. பசியோடு வந்தவன் முன் நாற்றப் பாண்டத் தட்டு காட்சியளித்தது. கண்ணீர்ப்புகையில் சிக்கியவன் போல் புலன் தடுமாறி கலகலத்து, கதவு நிலைவைக் கையாதரவாகப் பிடித்தபடி பித்துக்கொண்டவன்போல் நின்றான். ஐந்துநிமிஷம் பத்துநிமிஷம் ஆயிற்று அவன் சுயவுணர்ச்சி பெற. உணர்ச்சியுற்றதும்; மாதக்கணக்கில் விஷச்சுரத்தால் வாட்டப்பட்டவன்போல் மெல்லிய குரலில் தட்டுத்தடுமாறியபடி "என்னவிது" என்றான், ஏக்கமும் சோகமும் ஏமாற்றமும் துக்கமும் கலந்த குரலில் தலைவலி காய்ச்சல் சகிக்கமுடியவில்லை" என்றாள் தங்கம்; முத்தண்ணுவின் குரலிலும் நடையிலும் நடிப்பிலும், கொஞ்சம் பிராந்தி குடித்தால் சரிப்பட்டுவிடும் என்றான். தங்கம் ஐயோ இப்போதே தலை சுற்றல் வாந்தியும் ஓயாமல் வருகிறது. என்று கூறியபடி ஓக்களித்தாள் தங்கம் "டாக்டருக்குப் போன்செய்யட்டுமா" என்றான் முத்தண்ணு. "இன்னேரத்தில் சிரமம் வேண்டாம். விடிந்தால் சரிப்பட்டுவிடு" மென்றாள் தங்கம்.

நாளை ஷூட்டிங் இருக்கிறதே இன்று இப்படி இருந்தால் எப்படி? நாளை புரோகிராமை மாற்றுவதென்றால் எத்தனை ஆயிரம் நஷ்டமாகும்? சரி சரி, படுத்துக்கொள் காலை வந்து பார்த்துவிட்டு மேற்கொண்டு கவனிக்கலாம்" என்று சொல்லிவிட்டு எதிர் பார்த்த புதையலை பறி கொடுத்தவன் போல் ஏமாற்றமும் துக்கமும் உந்த அவ்விடத்தை விட்டு மெல்ல மெல்லத் தட்டுத் தடுமாறி நடந்து சென்றான்.

முதலாளி சென்றதும் தங்கம்மாள் கதவை நன்றாகத் தாள் போட்டு விட்டு பந்தயத்திலே வெற்றி பெற்ற சிறுவன் போல் துள்ளிக் குதித்து ஓடி படுக்கையில் விழுந்து சிரி சிரியென்று சிரித்தாள். தன் சிரிப்புக்கு எதிர் சிரிப்பு சிரிப்பது போல் ஒலிக்கேட்டு திடுக்குற்று அறையின் நாலாபக்கமும் பார்வையைச் செலுத்தினள். முக்காடிட்டபடி நின்று கொண்டிருந்தாள் டைரக்டர் டொண்டு; இதைக் கண்டதும் தங்கம் கல்லாய் சமைந்து விட்டாள், செய்வது அறியாது. இதே சமயத்தில் பின் வாசல் கதவு திறக்கப்பட்டு மிஸ் அவதாரம் உருவிய கத்தியுடன் தங்கம்மாளை நோக்கிப் பாய்ந்து வந்தாள். நெருங்கி விட்டாள் தங்கத்தை. ஓங்கி விட்டாள் கத்தியை. அடுத்த நொடி தங்கம் இரத்த வெள்ளத்தில் புரளப் போகிறாள். குண்டு போல் பாய்ந்து வந்தான் டைரெக்டர் டொண்டு, எட்டிப் பிடித்தான் அவதாரத்தின் ஓங்கிய கையை. இருவருக்கும் போர். அவதாரத்தின் கையே ஓங்கிவிடும் போலிருந்தது. தங்கம் திகிலும் திகைப்பும் பறந்தன. உணர்ந்தாள் ஆபத்து நிலைமையை. அவதாரத்தை எட்டிப் பிடித்து அடக்கி கத்தியைப் பிடுங்கிக் கொண்டாள், களைத்து சாய்ந்து கிடந்தனர் டைரெக்டரும் அவதாரமும், ஒருவரை ஒருவர் ரப்பர் பொம்மைகள் போல் பார்த்தபடி. இரண்டொரு நிமிடம் இருத்தனர். துள்ளி எழுந்தான் டைரெக்டர் டொண்டு. பொங்கும் புது ஆவேசத்தோடு, அசாதரவாகக் கிடக்கும் அவதாரத்தைத் தாக்க. நில் என்று அதட்டினாள் தங்கம் டைரெக்டர் டொண்டு ராவ் ஜிட்சு வித்தையால் மடக்கப்பட்டவன் போல் உணர்வற்று நின்றான். தங்கம் கீழே கிடந்த கத்தியை எடுத்தாள். தீர்ந்தோம் என்று திகில் கொண்டு தத்தளித்தாள் அவதாரம். தங்கம் கத்தியை எடுத்து வந்தாள். ஆனால் பாயவில்லை. பாய்ச்சவில்லை கத்தியைத் தன்னைக் கொலை செய்ய வந்த அந்தக் காதகியை கறுவுடலில், அதற்குப் பதிலாக மண்டியிட்டு அவதாரத்தின் முன் தலை தாழ்த்தாள் "அக்கா இதோ கத்தி! கொன்று விடு என்னை இப்போதே. சதித் துரோகி நான். காதல் கையின் அருமையை அறியாத மதி கேடி நான்.

உடலுக்குச் சுகம் தரும் வெந்நீர் சுடுகிறதே என்று எண்ணி சாக்கடை குளத்திலே குதித்து விட்ட முட்டாள் நான். வெட்கம் மானம் உணர்ச்சி எல்லாம் மடிந்து மரக்கட்டை யாகிவிட்டேன். காமாந்தகார கசடரின் கைப் பாவையாக அகப்பட்டுக் கொண்டேன், மானங்கெட்ட என்னை இனி உலகம் காரித் துப்பும், கெட்டழிந்த கசடே என்று. ஊர் நாற்றம் ஊறிய சாக்கடை என்று. இனி நான் நல்லோர் உலகத்தைத் திரும்பிப் பார்க்க முடியாது. பார்க்கவும் துணிவில்லை எனக்கு. ஆகவே கொன்றுவிடு. கொன்றுவிடு உன் கையால். நான் செய்த படுபாதகத்திற்கு மரண தண்டனை நிறைவேற்று. உன் கரத்தால்" என்று கண்ணீர் பெருக்கெடுத்தோடக் கதறினள். அவதாரமும் டைரெக்டரும் சினிமா டம்மி பொம்மைகள் போல் அமர்ந்திருந்தனர் ஆச்சரியத்தில் முழுகிப்போய்.

பட படவென கதவுத் தட்டப்பட்டது "மிஸ் தங்கம், தங்கம் திற கதவை. யாரது உள்ளே? கதவைத் திறக்கிறீரா அல்லது உடைக்கட்டுமா," என்று ஆத்திரத்தோடு கத்தினார் முதலாளி. மூவரும் திகிலும் பரபரப்பும் அடைந்தனர். சற்று முன் உயிர்ப் போராட்டம் நடத்தி உயிர் தப்பினர் டைரெக்டரும், அவதாரமும். முதலாளியின் குரல் கேட்டதும், மீண்டும் தங்கள் உயிருக்கு உலைவைக்க பீரங்கி வாய் திறந்து நிற்பது போல், நடு நடுங்கினர். தங்கம்மாளின் முகத்தைப் பரிதாபமாகவும் கருணைப் பிச்சை கேட்பது போலவும் பார்த்தனர். தங்கம்மாள் டைரெக்டரை மாத்திரம் குளிப்பு அறைக்குள் சென்று ஒளிந்து கொள்ளும்படி செய்துவிட்டு விரைத்து வந்து படுக்கையில் படுத்து அவதாரத்தின் காதோடு காதாக ஏதோ சொன்னாள். அவதாரம் கதவைத் திறந்துவிட்டு சோக நடிப்பு நடித்தாள். முதலாளி முதலியவர்கள் முன்னிலையில். முதலாளி படபடப்புடன் உள்ளே ஓடி வந்தார். தங்கம்மாள் போர்த்திப் படுத்துக் கிடப்பதையும் அவதாரம் சோகமே உருவாக நிற்பதையும் கண்டான். இருவரையும் மாறி மாறிப் பார்த்தான். கண்களை உருட்டி யுருட்டி என்ன கலாட்டா என்றான், அவதாரத்தைப் பார்த்து. ஒன்றுமில்லை தங்கத்துக்கு கொஞ்சம் பித்தக் கோளாறு போலிருக்கிறது- சுரவேக ஜன்னியிலே கலாட்டா செய்திருக்கிறாள். ஓடிவந்து பார்த்தேன் நிலைமையை அறிந்து சமாதானப்படுத்திப் படுக்க வைத்தேன்" என்றாள் அவதாரம்; உரிய நாடக நடிப்பு குறையாமல், தொழில் திறமை காட்டி.

"யாரடா அது டிரைவர் காரை எடுத்துச் சென்று டாக்டர் காத்காவை கையோடு அழைத்துவா என்று கதறினார் முதலாளி.

"வேண்டாம் அது நோய் அல்ல. இரவில் தனியாக வந்திருக்கிறாள் போலிருக்கிறது. பேய்த்தோஷம் ஏற்பட்டிருக்கிறது. டாக்டரால் இதை நீக்க முடியாது. மந்திரவாதியை அழைத்து வரச் சொல்லுங்கள்" என்றாள் அவதாரம்.

அரை மணி நேரத்தில் மந்திரத் தந்திர ஆர்பாட்டங்கள் நடந்தன. பேய் ஓட்டமெடுத்தது. தங்கமும் களைத்துத் தூங்கினள்; இன்று எப்படியோ மானத்தையும் உயிரையும் காப்பாற்றிக் கொண்டோம் என்று கலை நீங்கி.

ஆனல் மறுநாள் விடிந்ததும் விடியாததற்கு முன்னர் பரபரப்பாக ஓடி வந்தாள் மிஸ் அவதாரம், தங்கம்மாளின் அறைக்குள். துரோகி டைரெக்டர், தங்கம்மாள் தங்களை ஏமாற்ற மாய நாடகம் நடத்தினள் என்ற இரகசியத்தை முதலாளியிடம் சொல்லிவிட்டதாகவும் இன்றிரவு முதலாளி எப்படியும் தங்கத்தைப் பழி வாங்க சபதம் செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தாள் அவதாரம். தங்கம்மாள் மனம் கலங்கினள். அவதாரம் அவளைச் சமாதானப் படுத்தி தங்கத்தைப் போன்ற உருவத் தோற்ற முள்ள எக்ஸ்டரா நடிகை ஒருவள் இருப்பதாகவும் அவளுக்குப் பணம் கொடுத்து சரி செய்து இரவில் அவளை தங்கம்மாள் படுக்கையில் படுக்க செய்து தங்கம்மாளை அவதாரத்தின் அறையில் இரவெல்லாம் ஒளித்திருக்க செய்வதாகவும் தைரியம் கூறிவிட்டு வந்தது போலவே இரகசியமாய் வெளியேறினள்.

பகலெல்லாம் தங்கம் எந்தவித அசம்பாவிதத்தையும் எதிர் பாராதவளைப் போல் சந்தோஷமாகவும் சரஸமாகவும் முதலாளியுடனும் டைரக்டர் முதலியோரிடமும் பழகினள்.

(தொடரும்)

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்

சாந்தா விவரம்

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

காரியாலயம்

33, திருவேங்கிட முதலித் தெரு பெரியமெட்டு. சென்னை. 3.

எல்லா ஊர்களிலும்

ஹிக்கின் பாதம்ஸ் ரைல்வே புக் ஸ்டால்களிலுங் கூட கிடைக்கும்.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

டெலிபோன்: 86729.

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும், ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

Edited and Published by B. Ranganadha Naidu, 33, Thiruvengada Mudali Street, Periamet, Madras, 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press 2-11, Mount Road, Madras 2. Joint Editor: PIVIAR.